விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
Ria
WESTERN UNION WU
Moving Money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 15 திங்கட்கிழமை (30.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 347

### மஹர சிறைக்குள் பதற்றம்
## துப்பாக்கிச் சூட்டில் கைதி ஒருவர் பலி

(கொழும்பு)
நீர்கொழும்பு மஹர சிறைச் சாலையில் ஏற்பட்ட அமைதியின்மை 19

### யாழ்.பல்கலைக்கழக வாயிலில்
## கார்த்திகை தீபம் ஏற்றிய மாணவன் கைதாகி விடுதலை



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பரமேஸ்வரன் ஆலயத்துக்கு நேரே உள்ள பண்பாட்டு வாயிலில் கார்த்திகைத் தீபம் ஏற்றிய மாணவன் கோப்பாய் பொலிஸா 19

### மஹர சிறையில்
## தீ விபத்து 4 கைதிகள் உயிரிழப்பு

(கொழும்ப)
நீர்கொழும்பு 19

## குடாநாட்டை முடக்கும் தீர்மானம் இல்லை
### மாகாண சுகாதாரப் பணிப்பாளர்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண குடாநாட்டை முடக்குவது தொடர்பில் எந்தவித தீர்மானமும் இல்லை எனவும், மக்கள் குழப்பமடைய 19

### ஏழாலையில் இடம்பெறவிருந்த
## இரத்ததான முகாம் பொலிஸ், இராணுவத்தால் தடுத்து நிறுத்தம்

(குப்பிழான்)
புனிதமான கார்த்திகை மாதத்தை முன்னிட்டு ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப் பினரால் ஏழாலை மேற்கு உதய சூரியன் சனசமூக நிலையத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை ஏற்பாடு செய் 19

### சுன்னாகம் பொலிஸ் பிரிவிலுள்ள ஆலயங்களில்
# கார்த்திகை தீபம் ஏற்ற தடை விதித்த பொலிஸார்!
### அரசியல்வாதிகளின் தலையீட்டால் பின்னர் அனுமதி

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலயங்களில் நேற்றைய தினம் கார்த்திகை விளக்கீட்டு வழிபாட்டினை செய்யக்கூடாது என்று சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆலயங்களுக்கு நேரில் சென்று நிர்வாகத்தினரை கடுமையாக அச்சுறுத்தியுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட இணுவில் கந்தசாமி கோவில், மல்லாகம் சாலம்பை முருகன் ஆலயங்களில் கார்த் திகைத் தீபங்கள் ஏற்ற பொலிஸார் தடை விதித்த நிலையில் நிர்வாகத்தினரின் முயற்சியினால் இறுதியில் 19



### கிளி., மன்னாரில்
## ஐவருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மேற்கொள்ளப்பட்ட கொரோனாத் தொற்றுப் பரிசோதனை 19



### நிறுவனங்களில்
## தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்

12ஆம் பக்கம் பார்க்க

## கே.கே.எஸ் கடலில் குளித்த இளைஞன் நீரில் மூழ்கிப் பலி
### மற்றுமொரு இளைஞனைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை கடலில் குளித்த இருவர் அலையில் அடித்துச் சென்ற நிலையில் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது என்று பொலிஸார் தெரி வித்தனர்.
மற்றையவர் தொடர்பில் தகவல் கிடைக்க 19

### தோட்டக் கிணற்றடியில்
## தீபம் ஏற்றச் சென்றவர் கிணற்றில் விழுந்து பலி
### உரும்பிராய் கிழக்கில் சோகம்

(யாழ்ப்பாணம்)
உரும்பிராய் கிழக்கு பகுதியில் தனது தோட்டக் கிணற்றுக்கு அருகில் 19

## கொரோனாவால் மேலும் 7 மரணம்
### நேற்றும் +502 தொற்று

19ஆம் பக்கம் பார்க்க

### வடமராட்சியில் வாள்வெட்டு;
## முதியவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
வடமராட்சி, வல்லிபுரம் குறிச்சியில் இடம்பெற்ற வாள்வெட்டு தாக்குதலில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.
நேற்று மதியம் வீடு புகுந்த ரௌடிக்குழுவொன்று வீட்டுக்கும், உடைமைகளிற்கும் சேதம் ஏற்படுத்திவிட்டு, முதியவர் மீது வாள்வெட்டு 19

### உதயமாகியது
## சிவகுரு ஆதீனம்

03ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்
## சின்னப்பு யோசவ் செல்வநாயகம்



பிறப்பு
1945.11.03

இறப்பு
2018.11.30



விதையாய் கிடந்ததை
உம்மைச் செதுக்கி
விருட்ஷமாக்கினீர்!

நல்ல நாணயத்தினால்
நாணயம் சேர்த்தீர்!

நற்குடியினை ஆக்கும்
நற் தொழில் தந்தீர்!

கல்விச் சமூகமொன்றினை
உமது உறவாக்கினீர்!

அத்தனை துன்பங்களையும்
நகைச்சுவைக்குள் மறைத்தீர்!

நீங்கள் சிந்திய
வியர்வைத் துளிகள்
எமது வீடுகளில்
விளக்காய் எரிகிறது!

எங்களது ஒவ்வொரு
புன்னகையிலும்
உங்களது தியாகம் தெரிகிறது!

நேர்மையாய் உண்மையாய்
நல் மனிதர்களாய் நலம் வாழ
வழிதந்தீர்!


எம்முயர்வுகள் ஒவ்வொன்றிலும்
உங்களது உயிர் நிலையாகி
வாழும் !

ஆசீர் வணிக நிலையம்
2022, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் : பிள்ளைகள்
யோ. செ. அலென்ஸ் நின்சன், கி.சே.அனிற்ராசுபோஜினி
யோ. செ. ரஜீவ் (London)

(4801)

# உதயமானது யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீனம்


திருக்கார்த்திகைத் திருநாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லைக் கந்தனின் மணி ஒலித்ததைத் தொடர்ந்து நல்லூரில் யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீனம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. (ஜ-18)

## ஜப்பானின் முதலீட்டுத்திட்டம் கைவிடல்

(கொழும்பு)

ஜப்பான் அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்படவிருந்த முதலீட்டுத்திட்டமொன்று கைவிடப்பட்டுள்ளது.

மின்சாரத்தை விநியோகிப்பதற்கும், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளும் நோக்கிலும் குறித்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படவிருந்தது.

ஜப்பானின் இலகு ரயில் சேவைத் திட்டத்தை கைவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்ததையடுத்தே, ஜப்பான் அரசாங்கம் இலங்கைக்கு வழங்கப்படவிருந்த முதலீட்டுத் திட்டத்தை கைவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, குறித்த திட்டத்திற்கான நிதி இடைநிறுத்தப்படுவதானது, நாட்டின் மின்சார விநியோகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், எதிர்வரும் சில ஆண்டுகளில், நாட்டில் பாரிய மின்சாரப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

இதற்கமைய, குறித்த திட்டத்திற்கான நிதியை, வேறு ஒரு நாடொன்றின் ஊடாக பெற்றுக் கொள்வது குறித்து, அரசாங்கம் கவனஞ் செலுத்தியுள்ளது. (ஜ)

## போலித் தகவல்களை வழங்கிவிட்டு மறைந்திருக்கும் கொரோனா நோயாளிகள்

(கொழும்பு)

பண்டாரகம அட்டளுகம பிரதேசத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானதாக அடையாளம் காணப்பட்டவர்களில் பாதிப்பேரை வைத்தியசாலையில் அனுமதிக்க முடியாத நிலைமை ஏற்பட்டதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அந்த தொற்றாளர்களினால் பொய்யான விலாசங்கள் மற்றும் தவறான தொடர்பு இலக்கங்கள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தகவல்கள் வழங்கியவர்களில் அதிகமானோர் மறைந்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

## சுட்டிகள் விற்பனை மும்முரம்



(யாழ்ப்பாணம்)

திருக்கார்த்திகை தீப நாளான நேற்று பல இடங்களிலும் தீபச் சுட்டிகள் விற்பனை மும்முரமாக நடைபெற்றது. பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது. (5-250)

# தீவக பாடசாலைகள் வழமைபோல்;

## தனிமைப்படுத்தலுடன் தொடர்புடையோர் சமூகமளிக்க வேண்டாம்

### வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**சுகாதார பிரிவினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய தீவக வலய பாடசாலைகள் இன்று வழமை போல் இயங்கும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காரைநகர்மற்றும்வேலணை பகுதியில் இருவருக்குக் கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டுள்ள நிலையில் தொற்றுக்குள்ளானவர்கள் சமூக மட்டத்தில் நடமாடியுள்ளனர் என்பதன் அடிப்படையில் தொற்றுக்குள்ளானவருடன் நேரடியாக தொடர்புபட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களிலிருந்து எந்தவொரு மாணவரும் பாடசாலையில் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று சுட்டிக்காட்டியதுடன் இன்று தீவக வலய பாடசாலைகள் வழமை போல் இயங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான விசேட கூட்டம் இன்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது. அந்த கூட்டத்தின் முடிவில் அதற்குரிய முடிவு எட்டப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ஜ-33)

# ரணில் கட்சியை நாசமாக்கினார் சஜித் நாட்டை நாசமாக்குகிறார்

## ஜோன்ஸ்டன் கொதிப்பு



(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியை நாசமாக்கினார். சஜித் பிரேமதாஸ நாட்டின் அரசியல் கலாசாரத்தை நாசமாக்குகிறார் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வீதி புனரமைப்பு செய்யும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது பெருந்தெருக்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லாட்சி காலத்தில் இரண்டாந்தர அரசியல்வாதியான ரஞ்சன் ராமநாயக்கவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. அவர் நீதிபதிகளுடன் பயமின்றி தொலைபேசியில் உரையாடினார். ரஞ்சன் ராமநாயக்க சகலதையும் ஒலி, ஒளிப்பதிவு செய்பவர். எம்மை பழிவாங்குவதற்காக நீதிபதிகளுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

அதனை ஒலிப்பதிவு செய்தும் உள்ளார். சி.ஐ.டி பணிப்பாளர் ஷானி அபேசேகரவுடன் அவர் பல தடவைகள் தொலைபேசியில் உரையாடியுள்ளார். சிலர் மீது வழக்குத் தொடரவும் இன்னும் சிலரை சிறையிலடைக்கவும் அவர் கூறியுள்ளார். என்னையும் சிறையிலடைக்குமாறு முன்னாள் சி.ஐ.டி பணிப்பாளர் ஷானி அபேசேகரவிடம் கூறியுள்ளார். அவ்வாறே எம்மை சிறையிலடைத்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ரஞ்சன் ராமநாயக்க தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கினார். கம்பஹா மாவட்ட மக்களும் அவருக்கு விருப்பு வாக்குகளை வழங்கி நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்தனர். ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியை நாசமாக்கினார். சஜித் பிரேமதாஸ நாட்டின் அரசியல் கலாசாரத்தை நாசமாக்குகிறார் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# இந்தியாவுக்கு மஞ்சள் மீள் ஏற்றுமதி



(கொழும்பு)
சுங்கத் திணைக்களத்தின ரால் கைப்பற்றப்பட்டு களஞ்சி யப்படுத்தப்பட்டுள்ள மஞ்சள் அடங்கிய 62 கொள்கலன் கள், இந்தியாவுக்கே மீள் ஏற்று மதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள் ளது.

இந்தியாவிடமிருந்து அப ராதத் தொகையை அறவிட்டு, அதனை இந்தியாவுக்கே மீள் ஏற்றுமதி செய்யவுள்ளதாக சுங்க திணைக்களத்தின் ஊட கப் பேச்சாளரும் மேலதிக சுங்க பணிப்பாளருமான சுனில் ஜய ரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டு ள்ள கொள்கலன்களில் ஒரு மில்லியன் கிலோகிராம் மஞ் சள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியாவி லிருந்து இலங்கைக்கு கடத்தி வரப்பட்டு, அரசுடைமையாக் கப் பட்டுள்ள 30 தொன் மஞ்சளில் 10 தொன், ஆயுர்வேத உற்ப த்தி கூட்டுத்தாபனத்தின் கோரி க்கைக்கமைய, நிதியமைச்சால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# பி.சி.ஆர் பரிசோதனையை தவிர்ப்பவர்களுக்கு எச்சரிக்கை

## வீடுகள் சீல் வைக்கப்படும் என்கிறார் ரோஹண



**(கொழும்பு)**
**பி.சி.ஆர். பரிசோதனையைத் தவிர்ப்ப வர்களின் வீடுகளை சீல் வைக்க நடவ டிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊட கப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித் துள்ளார்.**

தனிமைப்படுத்தப்பட்ட பகு திகளில் பி.சி.ஆர் சோதனை களுக்கு ஆஜராக வேண்டாம் என்று நான்கு பேர் கொண்ட குழுவினர் பொதுமக்களுக்குப் பிரசாரம் செய்து வருவது குறி த்து தகவல் கிடைத்துள்ள நிலையில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இந்த எச்சரிக் கையை விடுத்துள்ளார்.

தற்போது 18 பொலிஸ் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் 11 கிராம உத்தியோ கத்தர் பிரிவுகளும் இதற்குள் அடங்கும். இந்நிலையில், கொழும்பு மாவட்டத்தில் 13 பொலிஸ் பிரிவுகள், கம்பஹா மாவட்டத்தில் 5 பொலிஸ் பிரிவு கள் மற்றும் அடுலுகம பிரதேச த்தில் 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தொடர்ந்தும் தனி மைப்படுத்தப்பட்டுள்ளன.

கண்டி மற்றும் அலவத்த பிர தேசத்தில் 2 கிராம உத்தியோ கத்தர் பிரிவுகள் தனிமைப்படு த்தப்பட்டுள்ளது என சுட்டிக்காட் டினார். எனவே பொது மக்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள அபாய நிலையைக் கருத்திற்கொண்டு பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறு த்துவதுடன் அவ்வாறு அதனை தவிர்ப்பவர்களின் வீடுகளை சீல் வைக்க நடவடிக்கை எடுக்க ப்படும் எனவும் அவர் மேலும் எச் சரித்துள்ளார். (ஜ-4)

# அலரிமாளிகை முடக்கம் முற்றிலும் உண்மையானது

## சண்டே டைம்ஸ் தகவல்



(கொழும்பு)
அலரிமாளிகை முடக்கப்பட் டுள்ளது நான்கூட அங்கு சென்று பணியாற்ற முடியாது என ஸ்ரீல ங்கா பொதுஜன பெர முனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக சண்டே டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அலரிமாளிகை முடக்கப்பட வில்லை என பிரதமரின் ஊடக செயலாளர் தெரிவித்துள் ளமை குறித்தும் அவர் கடும் சீற்றம் வெளியிட்டுள்ளார் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

பிரதமரின் ஊடக செயலா ளர் சொன்னதும் முற்றிலும் பொய் என தெரிவித்துள்ள பசில் ராஜபக்ஷ அலரிமாளிகை முற் றாக முடக்கப்பட்டுள்ளது.

என்னால் அங்குள்ள அலு வலகங்களை பயன் படுத்த முடியவில்லை என்றும் உண் மையை அறிய விரும்பினால் நீங்கள் யாரையாவது அனுப்பி பார்க்கலாம், அந்த பகுதி முற் றாக மூடப்பட்டுள்ளது, பணியா ளர்களை வீட்டிலிருந்து பணி புரி யுமாறு கேட்டுக்கொண் டுள்ளனர் என்றும் தெரிவித் தார் என சண்டே டைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

பிரதமரின் ஊடக செயலா ளருக்கு தான் என்ன செய்கி ன்றேன் என்பது தெரியாது உண்மைக்கு மாறான விட யங்களை தெரிவிப்பதன் மூலம் பிரதமரின் பெயருக்கு களங்கத்தையும் அவருக்கு தர்ம சங்கடமான நிலை யை யும் ஏற்படுத்துகின்றனர் என் றும் தெரிவித்ததாக சுட்டிக் காட்டியுள்ளது.

நாங்கள் வெளிப்படையா னவர்களாக மக்களிடமிருந்து உண்மைகளை மறைக்காத வர்களாகயிருக்க வேண்டும் எனவும் உண்மையை மறை ப்பதால் என்ன பயன்? பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூட முடக்க லின் பின்னர் அலரிமாளிகை க்கு செல்லவில்லை என பசில் ராஜபக்ஷ தெரிவித்ததாக மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஜ-4)

# தூத்துக்குடியில் இலங்கையர்கள் கைது

(தூத்துக்குடி)
இந்தியாவின் தூத்துக்குடி கடற்பகுதியில் ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருட் களுடன் கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் 6 பேர் மதுரை சிறைச்சாலையில் தடு த்து வைக்கப்பட்டுள்ளனர்.

தூத்துக்குடி கடல் எல்லை யில் இந்திய கடலோர காவல் படையினர் கடந்த வெள்ளிக் கிழமை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது இலங்கை யர்கள் 6 பேரும் கைது செய் யப்பட்டிருந்தனர்.

தூத்துக்குடி- வாழைத்தீவு கடற்பகுதியில் சந்தேகத்திற்கிட மான முறையில் சென்ற படகை கடலோர காவல் படையினர் சுற்றிவளைத்து சோதனை யிட்டுள்ளனர்.

இதன்போது, படகில் 100 கிலோகிராம் ஹெராயின் மற் றும் கைத்துப்பாக்கிகளை தமி ழக கடலோர காவல் படை யினர் பறிமுதல் செய்துள்ள னர்.

கைது செய்யப்பட்ட இல ங்கையர்களை தூத்துக்குடி நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தியதை அடுத்து, சில நாட்களுக்கு மதுரை மத்திய சிறையில் தடுப் புக் காவலில் வைக்க உத்தர விடப்பட்டுள்ளது. (ஜ)

# பாகிஸ்தான் பிரஜை பலி

(கொழும்பு)
மகர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பாகிஸ் தான் நாட்டைச் சேர்ந்த கைதியொருவர் நேற்று முன் தினம் உயிரி ழந்துள்ளார்.

குறித்த கைதி நீண்ட கால மாக சிறுநீரக நோயால் பாதிக் கப்பட்டிருந்த நிலையில் ராக மவில் அமைந்துள்ள கொழு ம்பு வடக்கு போதனா வைத் தியசாலையில அனுமதிக்கப் பட்டிருந்தார். இந்நிலையிலேயே உயிரிழந்துள்ளதாக சிறைச் சாலை ஆணையாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்துள் ளார். அதன்படி 45 வயதான பாகிஸ்தான் பிரஜை சிறுநீரக செயலிழப்பு காரணமாக உயி ரிழந்துள்ளார்.

மகர சிறைச்சாலையிலிரு ந்து ஒரு வார காலத்திற்குள் பதி வான இரண்டாவது உயிரிழப்பு சம்பவம் இதுவாகும். (ஜ-30)

# ஒருவர் கைது



(கொழும்பு)
பேலியகொட பொலிஸ் பிரி வுக்குட்பட்ட பாலமொன்றிற்கு அருகில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பேலியகொட குற்றப்புலனாய்வு பிரிவினரு க்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்க மைய மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போது ஹெரோயினு டன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

வத்தளையைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே இவ் வாறு கைது செய்யப்பட்டுள்ள துடன் இவரிடமிருந்து 3 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கைப் பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேலியகொட பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர். (ஜ)

# கொரோனா கட்டுப்பாட்டுப் பணியில் டெங்கு ஒழிப்புப் பிரிவினர்

(கொழும்பு)
பேருவளை மற்றும் களுத் துறை ஆகிய சுகாதார வைத் திய அதிகாரிகள் பிரிவுகளில் கொரோனா வைரஸ் தொற் றைக் கட்டுப்படுத்தும் நடவடிக் கையில் டெங்கு ஒழிப்பு பிரிவு உதவியாளர்கள் ஈடுபடுத்தப்பட் டுள்ளனர்.

பேருவளை மற்றும் களுத் துறை ஆகிய சுகாதார வைத் திய அதிகாரிகள் பிரிவுகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் அவ ர்கள் கொரோனா வைரஸ் தொற் றைக் கட்டுப்படுத்தும் நடவ டிக்கையில் இருந்து விலகி யுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன்காரணமாக, குறித்த பிரதேசங்களில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான வர்களை தனிமைப்படுத்தல் மற்றும் கொரோனா தொற் றைக் கட்டுப்படுத்தும் நடவ டிக்கையில் டெங்கு ஒழிப்பு பிரிவு உதவியாளர்கள் ஈடுபட் டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. (ஜ)

## யா/ஸ்ரீசோமாஸ்கந்த இந்து ஆரம்பப் பாடசாலை புத்தூர்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## 2020ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி 37 மாணவர்கள் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளனர்



கி.நிருஷிகா-192, பா.தமிழ்விழி-191, ர.அஸ்மிகா-189, ச.சானுஜன்-187, செ.டிலான்-184, ர.நியூசர்மி-182, கி.வைஸ்ணஜா-180



ச.சஞ்சையன்-179, து.லகனிகா-179, ம.லக்ஸன்-178, க.கர்சயன்-178, ஜெ.வர்ணன்-178, ர.ரினுஸ்ரன்-177, ஜெ-.துஷானி-176




சு.கனுஸ்ரிகா-175, ச.துர்க்காஜினி-173, ல.பாத்திமா-171, பு.பாவனா-170, ம.மதுசாயினி-170, ற.வைஸ்ணவி-169, ஜெ.ஜெனிலியா-168



க.ரம்சன்-168, ஜெ.தஸ்வினி-168, ஜெ.கயூர்ணன்-167, ல.சந்துரு-167, சு.ஆர்த்திகா-166, க.தர்ணிகா-165, கு.சௌமி-164



இ.ஜதர்சிகா-164, ர.தக்சயன்-164, ப.கீதசாயி-163, நீ.காவியா-162, ரா.விதுசா-162, க.கவியிசை-161, வி.கவிர்தன்-161



ர.ரஸ்மிகன்-160, தி.ரட்சிகா-160

இவர்களை சிறப்பாக வழிநடத்திய அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்



அதிபர்
திரு.இ.கோகுலராகவன்



திரு. ப.புளோரன்ஸ்



திருமதி
பா. மதுராந்தகன்



திருமதி.
து.சிவனேசன்



### பரீட்சைக்கு தோற்றிய 98 மாணவர்களில் 86 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்

உ.டிசானி-159, ம.மதுர்சிகா-158, சி.பவிசன்-158, செ.யதுர்சிகா-154, பா.கஜார்த்தனன்-154, ர.டயன்சன்-153, யோ.கவிப்பிரியன்-153, வி.பானுசன்-150, ஜெ.டனுசியன்-150, வி.கிசானா-149, உ.கபின்சன்-147, யோ.கிசானியா- 147, சு.தகவினி-141, பி.வனுஜா-140, ச.தருணிகா-140, சு.கஜானன்-139, ந.லபீனா-139, ர.பிரபாலினி-138, சி.யமிஸ்ணா-137, சி.அனுஸ்கான்-137, உ.கிதுசன்-136, இ.மகிசா-136, சு.டினோஜன்-132, த.பிரணவன்-132, அ.சரண்-132, இ.அனுஸ்கா-132, உ.தரணிகன்-130, சு.ஆதிரியன்-130, கு.விசானா-128, உ.பிரன்சிகா-128, ஸ்ரீ.தனுஸ்ரன்-126, இ.சுபதா-124, ல.சஞ்சை-123, கே.லவகுசன்-123, ஜெ.யஸ்மினா-121, உ.விபூசனன்-119, உ.சபீசன்-117, க.கஸ்மீரா-115, ம.அபிநயா-115, அ.வனோஜ்-114, சு.றொசானி-113, ப.பிரியங்கா-108, ச.சர்மிகா-108, த.ஹரீசன்-108, சு.தரணிஜா-105, ந.தர்மிசன்-104, ர.அக்சயன்-104, செ.கவிநிலா-102 , து.துவிஸ்னன்-102.

**பழைய மாணவர் சங்கம், யா/ ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்.**

(4787)

# வெள்ள நீர் வழிந்தோட வழி செய்யுமாறு மக்கள் கோரிக்கை



(சாவகச்சேரி)

அண்மையில் பெய்த கன மழை காரணமாக கொடிகாமம் மத்தி நாவலடிப் பகுதியில் வெள்ளநீர் தேங்கியதால் 40 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஜே/327 கிராம உத்தியோகத்தர் பிரிவில் ரயில் பாதைக்கு அருகாமையில் உள்ள குடும்பங்களே இவ்வாறு வெள் ளம் காரணமாக பாதிப்படைந்துள்ளன.

வெள்ள நீர் வடிந்து வீதியின் மறுபுறம் செல்வதற்கான மதகு அமைக்கப்பட்டும் வெள்ள நீர் வடிந்தோடாமல் காணப்படுகிறது. இந்நிலை வருடா வருடம் ஏற்படுகிறது.

இவ்வாறு தேங்கும் வெள்ள நீரை நிரந்தரமாக வெளியேற்றுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தித்தர வேண்டும் என அப்பகுதி மக்கள் வெள்ளத்தைப் பார்வையிடச் சென்ற சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் தி.தங்கவேலுவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-30)

## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் -2020

**யா/ வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம்**

ப.சிறிபவனுஜா - 188, சி.அஸ்வின் - 179, நி.ஹரிஸ் -178, ர.லகிர்சன் - 177, க.கஜலக்சன் - 176, நி.தர்ஷமிலா - 174, ர.கௌதம் - 174, க.லதீஸ் - 169, சு.லிதிகா - 168, த.காஷ் மியா - 168, ஐ.சனோஜன் - 165, ற.கிருஷ்சயன் - 164





**பிரான்ஸ் பூமணி அம்மா அறக்கட்டளை அமைப்பினரால் யாழ்ப்பாணத்துக்கான தலைவர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் ஊடாக இளவாலை ஜே/155 கிராம சேவகர் பிரிவில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 20 குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் அந்தப்பகுதி கிராம உத்தியோகத்தரின் அனுமதியுடன் வழங்கிவைக்கப்பட்டன. அதே தினத்தில் யாழ்ப்பாணம் ஜே/80 கிராம உத்தியோகத்தர் பிரிவில் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றுக்கு 20 கோழிகளும் கூடும் இதே அமைப்பினால் வழங்கி வைக்கப்பட்டது.**

# மயானத்தையும் விட்டு வைக்காத திருடர்கள்

(கரணவாய்)

கரணவாய்ப் பகுதியில் அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்ற நிலையில் கிராய் இந்து மயானத்திலும் கடந்த வெள்ளிக்கிழமை 6 கேடர்கள் களவு போயுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கரணவாய் தெற்கு கிராய் இந்து மயானத்தில் மரணச் சடங்கின் இறுதிக் கிரியைகள் மேற்கொள்ளப் போடப்பட்ட கொட்டகையின் இரும்பு கேடர்கள் களவு போயுள்ளன.

இவ்வாறு களவு போயுள்ள கேடர்களின் பெறுமதி சுமார் 5 இலட்சம் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே மயானத்திற்கு பொறுப்பானவர்கள் உரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-60)

# இருளில் மூழ்கும் பேருந்து நிலையம்

(நெளுக்குளம்)

வவுனியா பழைய பேருந்து நிலையம் கடந்த சில தினங்களாக இருளில் மூழ்கி வருகிறது. இதனால் பேருந்து நிலையத்தை சூழவுள்ள வர்த்தக நிலையங்கள் இருள் சூழ்ந்து காணப்படுகின்றன.

இதனை உடனடியாக சீரமைத்துத்தருமாறு அப்பகுதி வர்த்தகர்கள் கோருகின்றனர். வுனியா பழைய பேருந்து நிலையப்பகுதியில் நகர சபையினால் பொருத்தப்பட்டுள்ள மின்குமிழ்கள் சில தினங்கள் இரவில் ஒளிர்வதில்லை. அப்பகுதி எங்கும் இருள் சூழ்ந்து காணப்படுகின்றது. தற்போது காணப்படும் மழையுடனான காலநிலையினால் நேரகாலத்திற்குள் இருள் சூழ்ந்து கொள்கின்றது.

எனவே இரவு வேளையில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வர்த்தக நடவடிக்கை மேற்கொள்ள முடியவில்லை. இந்நிலையை உடனடியாக சீரமைத்துத்தருமாறு பழைய பேருந்து நிலையத்திலுள்ள வர்த்தகர்கள் கோரியுள்ளனர்.

இவ்விடயம் குறித்து வர்த்தகர் சங்கத்தினர் தெரிவிக்கும் போது , வர்த்தகர்களிடமிருந்து முறைப்பாடு கிடைக்கப்பட்டுள்ளதாகவும் இவ்விடயம் நகர சபையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் அவர்களுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

(5-4-299)

# வீதி புனரமைக்கப்படும் தவிசாளர் உறுதி

(கரணவாய்)

கரவெட்டி மேற்கு முதலியார் கோவில் வீதி புனரமைப்பு செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. இதனை அப்பகுதி மக்கள் கிராம உத்தியோகத்தர் ஊடாக கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளரின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

அதனையடுத்து கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் க.ஐங்கரன் நேற்று முன்தினம் சனிக்கிழமை முதலியார் கோவில் வீதியை நேரில் சென்று பார்வையிட்டார்.

அத்துடன் எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் வீதியைப் புனரமைப்புச் செய்து தருவதாக அப்பகுதி மக்களிடம் உறுதியளித்தார். (5-60)



*யா/ வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் முகமாக வாதரவத்தையைச் சேர்ந்த பொன்னம்பலம் தங்கராசா என்பவர் ஜேர்மனியில் வசிக்கும் ரவீந்திரன் குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் கற்றல் உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.*

# அதிபர்கள்-சுகாதாரப் பகுதியினர் கலந்துரையாடல்

(கரணவாய்)

பருத்தித்துறை கோட்டத்திற்குட்பட்ட அதிபர்களுக்கான பாடசாலை சகாதார மேம்பாட்டிற்கான கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை கோட்டக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் நடத்தப்பட்டது.

இதில் சுகாதார மேம்பாடு, சுகாதார கல்வி நுட்பங்கள், பாடசாலை சுகாதார மேம்பாட்டின் உக்திகள், பாடசாலை சிற்றுண்டிச்சாலையின் முக்கியத்துவம் மற்றும் கொரோனாக்கட்டுப்பாடு பற்றிய கருத்துரைகள் வழங்கப்பட்டன.

கோட்டக்கல்வி அதிகாரி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வளவாளர்களாக தாய் சேய்நல வைத்திய அதிகாரி வைத்தியர் நித்தியானந்தா, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பிரிந்திகா, சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர் ஜெயபாலன், பருத்தித்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-60)

# சிறைக் கொத்தணி 1091

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட சிறைச் சாலை கைதிகளின் எண்ணிக்கை 1000 ஐக் கடந்துள்ளது.

மேலும் 187 சிறைக்கைதிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று ஞாயிற்றுக்கிழமை உறுதி செய்யப்பட்ட நிலையில், இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, நாட்டில்கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட சிறைச்சாலை கைதிகளின் எண்ணிக்கை ஆயிரத்து 91 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

# தப்பிக்க முயற்சித்த கைதிகள் கைது!

(கொழும்பு)

போகம்பரை பழைய சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் தப்பிச்செல்ல முற்பட்ட 4 கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறைச்சாலையில் இதுவரையில் 313 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தீப்பற்றி எரிந்த ஜீப்



(கொழும்பு)

கொஸ்கமை பகுதியில் ஜீப் ரக வாகனம் ஒன்று தீப்பற்றி எரிந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கொட்டாவை பகுதியில் இருந்து கதிர்காமம் நோக்கி பயணித்த ஜீப் ரக வாகனம் ஒன்றே இவ்வாறு தீப்பற்றி எரிந்ததாக கூறப்பட்டுள்ளது. (ஐ)

# ஆலமரத்தில் அம்மன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வாழைச்சேனை புதுக்குடியிருப்பு பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் உள்ள ஆலமரமொன்றில் நேற்று முன்தினம் அம்மனின் திருவுருவம் தெரிந்ததையடுத்து பக்தர்கள் படையெடுத்துள்ளனர்.

குறித்த ஆலயத்திலுள்ள 80 வருடம் பழைமைவாய்ந்த ஆலமரத்தின் விழுதில் அம்மனின் உருவம் பொறிக்கப்பட்டது போன்று காட்சி அளிப்பதை தொடர்ந்து



மக்கள் அங்கு விரைந்துள்ளனர்.

இவ்வாறு அம்மன் உருவம் தோன்றியதால் ஏதும் அசம்பாவிதங்கள் நடக்க வாய்ப்பு உள்ளதா என்ற அச்சம் மக்கள் மத்தியில் காணப்பட்டுள்ளது. (ஐ)

**வேலைக்கு ஆட்கள் தேவை**

முல்லைத்தீவு பகுதியில் தோட்டம் சம்பந்தமான சகல வேலைகளும் செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். தோட்டங்களில் தனியாக வேலை செய்பவர் விரும்பத்தக்கது. ஆரம்ப சம்பளம் 30,000/=

காவல் வேலைக்கும் ஆள் தேவை. சம்பளம் 15,000/= மேலதிக வேலை செய்தால் அதற்கு சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
077 168 1697, 077 113 3667

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



செல்வி.செந்தில்வேல் நிருக்ஷி
(166)



செல்வன்.தயாபரன் சந்தோஷ்
(148)



செல்வி.சந்திரபாலன் சஞ்சீகா
(139)



செல்வி.நிரோசன் நிக்ஷா
(116)

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யா/கலட்டி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மாணவி செ.நிருக்ஷி (166) அவர்களையும், தேர்ச்சி மட்டத்திற்கு மேலான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/கலட்டி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, யாழ்ப்பாணம்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை**



செல்வன்.உ.அட்சயன்
181 புள்ளி



செல்வன்.நா.அருண்
161 புள்ளி

2020 ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த **செல்வன் உ.அட்சயன், செல்வன் நா.அருண்** ஆகியோரை பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் எமது பாடசாலையில் தரம் 5 இல் கல்வி கற்கும் சகல மாணவர்களும் சித்திப் புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்றுள்ளமையையிட்டு பெருமிதம் கொள்கின்றோம். சித்திப் புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற அனைத்து மாணவர்களையும் அவர்களுக்கு கற்பித்து வழிகாட்டிய ஆசிரியை **திருமதி.ஜெ.சிறிஸ்கந்தராசா** அவர்களையும் தேவையான வசதிகளையும் வாய்ப்புக்களையும் வழங்கிய பாடசாலைச் சமூகத்தையும் பாராட்டி வாழ்த்துவதுடன் நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெற்றோர்கள் தரம் 5 (2020)
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.

(4782)

**பாராட்டி வாழ்த்துகிறோம்**

**செல்வி.நிறேசன் கிருஸ்ரியா**



யாழ்/பெரியவிளான் றோ.க.த.
பாடசாலையின் 2020 ஆம் ஆண்டிற்கான
புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி
175 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
நிறேசன் ஜனனி
தம்பதியரின் புதல்வி
செல்வி . கிருஸ்ரியா
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன்
அவருக்கு கற்பித்த அதிபர்,
ஆசிரியர்களுக்கும் நன்றியினை
தெரிவித்துக் கொள்கிறோம்.

CONGRATULATIONS

வாழ்த்துவோர்:
தாத்தா மணிகலாதன்,
அம்மம்மா ம.பத்மாவதி, மாமன்மார்,
அத்தைமார், அன்ரா, மச்சான்மார்,
மச்சாள்மார், தங்கை, தம்பி.

இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

(C-804)

# பருவ மழை தவறியதால் காலபோகச் செய்கை தாமதம்

(கண்டாவளை)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் பருவ மழை பிந்தியதன் காரணமாக கால போக விதைப்புக்காக நிர்ணயிக்கப்பட்ட காலத்தை நீடிப்புச் செய்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இவ்வாண்டுக்கான பருவ மழை காலம் பிந்தியதால் ஏற்கனவே திட்டமிடப்பட்ட வகையில் காலபோக பயிர் செய்கைகளை விவசாயிகள் முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான விசேட விவசாயக் குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மாவட்ட செயலக சிறிய மாநாட்டு மண்டபத்தில் அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதன் போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டத்தில "நீர்ப்பாசன செழுமை" (வாரி சௌபாக்கிய) திட்டம், பருவ மழை பிந்தியதன் காரணமாக விதைப்புக்காக நிர்ணயிக்கப்பட்ட காலத்தை நீடிப்புச் செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வீட்டுப் பொருளாதார போசணையை மேம்படுத்தி குடும்ப அலகுகளை வலுவூட்டுவதற்கான தேசிய வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயப்பட்டது.

"வாரி சௌபாக்கிய" திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் புனரமைப்பு செய்யப்படவுள்ள குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள் தெரிவு செய்யப்பட்ட பட்டியல் துறை சார்ந்த அதிகாரிகளுடன் மற்றும் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்பட்டு மேலும் இணைக்கப்படவேண்டிய குளங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு இறுதியாக திட்டத்திற்குரிய ஐம்பது குளங்களும் மேலதிகமாக நான்கு குளங்களுமாக 54 குளங்கள் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட அபிவிருத்தி குழுவின் அனுமதிக்காக அனுப்பி வைப்பது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பருவ மழை பிந்தியதன் காரணமாக விதைப்புக்காக நிர்ணயிக்கப்பட்ட காலத்தை நீடிப்புச் செய்தல் குறிப்பாக இறுதி விதைப்பு, நீர்ப்பாசனம், அறுவடை என்பவற்றிற்கான கால நீடிப்பினை வழங்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வீட்டுப் பொருளாதார போசணையை மேம்படுத்தி குடும்ப அலகுகளை வலுவூட்டுவதற்கான தேசிய வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மேலும் கால்நடை வளர்ப்பிற்கான மேய்ச்சல் தரை இன்மையால் கால்நடை வளர்ப்போர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய விடயங்கள் கமக்காரர் அமைப்பினரால் முன்வைக்கப்பட்டது. பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அதற்கென நிலங்கள் அளவிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார். கட்டாக்காலி மாடுகள் தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

விவசாய அனர்த்த மதிப்பீட்டுக் குழு சரியான முறையில் மதிப்பீடுகளை மேற்கொள்வதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வீதிகளில் நடமாடும் மாடுகளால் ஏற்படும் பிரச்சினைகளிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

குறிப்பாக விபத்துக்களை தடுப்பதற்காக இரவு வேளைகளில் மாடுகளை இனங் காண்பதற்காக அவற்றுக்கு கழுத்துப்பட்டி அணிவித்தல் செயற்றிட்டம் தொடர்பாக தொண்டர் நிறுவனத்துடன் ஆலோசிக்கப்பட்டு வருவதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், திட்டமிடல் பணிப்பாளர், உதவி நீர்ப்பாசன பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், உதவிப் பிரதேச செயலாளர்கள், கால்நடை வைத்திய உதவிப் பணிப்பாளர், வனவள திணைக்கள உதவிப் பணிப்பாளர், விவசாயத்துறைசார் திணைக்களத் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டார்கள். (5-315)

## முல்லைத்தீவில் குளங்களின் நீர்மட்டம் குறைவாகவே காணப்படுகிறது

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாரிய குளங்களான முத்தையன் கட்டுக் குளம், வவுனிக்குளம் உள்ளிட்ட குளங்களின் நீர் மட்டங்கள் அரைவாசிக்கும் குறைவாகவே காணப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் நேற்று காலை வெளியிட்ட தகவல்களின்படி முத்தையன் கட்டு நீர்ப்பாசனக் திணைக்களத்தின் கீழுள்ள முத்தையன் கட்டு குளத்தின் நீர் மட்டம்-9 அடி 5 அங்குலம், கணுக்கேணிக்குளத்தின் நீர் மட்டம்-12 அடி, உடையார்கட்டுக் குளத்தின் நீர்மட்டம் -10அடி 1 அங்குலம், தண்ணிமுறிப்பு குளத்தின் நீர் மட்டம் -15அடி 3 அங்குலம், மடவாளசிங்கம் குளத்தின் நீர் மட்டம் -10அடி 1 அங்குலம், விசுவமடுக்குளத்தின் நீர் மட்டம் - 9அடி 9 அங்குலம், மருத மடுக்குளத்தின் நீர் மட்டம் -7 அடி 3 அங்குலம், தட்டையமலை குளத்தின் நீர் மட்டம் 9அடியாகவும் காணப்படுகின்றன.

இதேபோன்று வவுனிக்குளம் நீர்ப்பாசனக் குளத்தின் கீழுள்ள வவுனிக்குளத்தின் நீர் மட்டம் -10 அடியாகவும் தென்னியன்குளம், அம்பலப் பெருமாள் குளம், கல்விளான் குளம், கோட்டைகட்டியகுளம், கொல்லவிளாங்குளம், மல்லாவிக்குளம் ஆகியவற்றின் நீர் மட்டம் -4 அடியாகவும் ஐயன் கன்குளம், பழைய முறிகண்டி குளம் ஆகியவற்றின் நீர் மட்டம் 5 அடியாகவும் மருதன் குளம், பனங்காமம்குளம் ஆகியவற்றின் நீர் மட்டம் 3 அடியாகவும் தேராங்கண்டல் குளத்தின் நீர்மட்டம் -6 அடி யாகவும் காணப்படுகின்றன. (5-315)

## நகர்ப் பகுதிகளில் தேங்கும் கழிவுகள் விரைவில் அகற்றப்படும்

நகரசபை தவிசாளர்



(குருமன்காடு)

வவுனியா நகரசபைக் குட்பட்ட பகுதிகளில் கடந்த பல நாட்களாக வீதியோரங்களில் (கதிரேசு வீதி, குருமன்காடு, மன்னார் வீதி) காணப்படும் குப்பைகள் அகற்றப்படாமையினால் குப்பைகள் தேங்கிக் காணப்படுகின்றன.

நகர சபையினரினால் குப்பைகள் அகற்றும் பணிகள் தினசரி முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் வீதியோரங்களில் காணப்படும் குப்பைகளை நகரசபையினர் அகற்றுவதில்லை எனப் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பைகளில் மற்றும் குப்பைக் கூடைகளில் வைக்கப்படும் குப்பைகளை மாத்திரம் நகர சபையின் சுத்திகரிப்பு பணியாளர்கள் எடுத்துச் செல்லுகின்ற போதிலும் வீதிகளில் தேங்கி கிடக்கும் குப்பைகளை நகர சபையினர் அகற்றுவதில்லை என்பதுடன் பல நாட்களாக வீதியோரங்களில் குப்பைகள் தேங்கி கிடப்பதனால் தொற்று நோய் பரவும் அபாயமும் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் மேலும் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பில் வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமனிடம் கேட்ட போது,

நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சிரமதான பணிகள் இடம்பெற்று வருகின்றமையினால் ஏனைய பகுதிகளில் குப்பைகளை அகற்றுவதில் சிறு தடங்கல் நிலை ஏற்பட்டுள்ளது. மிக விரைவில் தேங்கி கிடக்கும் குப்பைகள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (5-250)

## வீதிப் புனரமைப்பும் மரநடுகையும்

(நெளுக்குளம்)



வவுனியா நாகர்இலுப்பைக் குளம் உள்ளக வீதிக்கு காப்பெற் இடும் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன. ஜனாதிபதியின் விசேட வீதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியாக ஒரு இலட்சம் கிலோமீற்றர் நீளமான வீதிகள் புனரமைப்பு பணிகள் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் 4 கிலோ மீற்றர் நீளம் கொண்ட வவுனியா நாகர் இலுப்பைக்குளம் உள்ளக வீதிக்கு காப்பெற் இடும் பணிகள் பாராளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கு.திலீபனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பதினைந்து வருடங்களுக்கு மேலாக செப்பனிடப்படாமல் காணப்பட்ட குறித்த வீதி திருத்தப்பணிகளுக்காக 54 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வீதி திருத்தப் பணிகளை ஆரம்பித்து வைத்த பாராளுமன்ற உறுப்பினர் மரக்கன்றுகளையும் நாட்டி வைத்திருந்தார். இந் நிகழ்வில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (5-299)

# இராசிபலன்

**30.11.2020**
கார்த்திகை 15, திங்கட்கிழமை
பூரணை பிற்பகல் 3.35 மணிவரை
கார்த்திகை காலை 7.15 மணிவரை
சுபநேரம் 12.14-1.44 மணிவரை
இராகுகாலம் 7.44-9.14 மணிவரை
சந்திராஷ்டமம்:- விசாகம்
பூரணை விரதம், விஷ்ணு ஆலய தீபம் வளவன்


மேஷம்

எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், குடும்பத்தில் தேவைகள் பூர்த்தியாகும், வாக்கு மேன்மையுண்டு.


ரிஷபம்

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எந்தவொரு வேலையையும் நாளை யென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.


மிதுனம்

விரயங்கள் ஏற்படாமலிருக்க விழிப்புணர்வுடன் இருப்பது அவசியம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.


கடகம்

அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும் வாய்ப்புண்டு.


சிம்மம்

முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சிகள் கைகூடும், அந்நியர் உதவியுண்டு, போசன சுகமுண்டு.


கன்னி

வரவேண்டிய பண வரவுகள் எளிதில் வந்து சேரலாம், தொழில் போட்டிகள் மாறும், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், புதிய திட்டங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


துலாம்

பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், கூட்டாளிகளிடம் விழிப்புணர்வு அவசியம்.


விருச்சிகம்

வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.


தனுசு

இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.


மகரம்

உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும்.


கும்பம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், செய்தொழிலில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.


மீனம்

மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் வழியில் ஆதரவு பெருகும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர்.

**மற்றவர்களை நம்பும் அளவுக்கு உன்னையே நீ நம்பு.**

# பிள்ளையானுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு நியாயமானது தான்

## நீதிமன்றின் மீது விரல் நீட்டுவது பயங்கர விடயம் என்கிறார் நீதியமைச்சர்





(கொழும்பு)

பிள்ளையானுக்கு வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பு நியாயமானது. மக்களின் நம்பிக்கையை இல்லாமலாக்கும் வகையில் நீதிமன்றத்தின் மீது விரல் நீட்டுவது பயங்கரமான விடயமாகும் என நீதி அமைச்சர் அலி சப்ரி எச்சரித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை, நீர்வழங்கல், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிமன்ற தீர்ப்புக்கள் குறித்து பாராளுமன்றத்தில் விமர்சிப்பது மிகவும் கீழ்த்தரமான செயலாகும். நீதிமன்ற சுயாதீன தன்மையைப்பாதுகாக்க அனைவரும் கடமைப்பட்டுள்ளனர். அதற்காக அவரவர் தேவைக்கமைய தீர்ப்பு வழங்க நீதிமன்றங்களுக்கு கடமையில்லை. அண்மைக்காலத்தில் நீதிமன்றங்களால் அதிகமான வழக்கு தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவை தெரிவுசெய்யப்பட்ட வழக்குகளின் தீர்ப்பு அல்ல.

கடந்த 5 வருடத்தில் நீதிமன்ற துறைக்கு பாரிய அழுத்தம் ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் இடம்பெற்றன. பொலிஸ் கட்டளைச்சட்டத்துக்கு முரணாக நிதி குற்றப்புலனாய்வுப் பிரிவு ஆரம்பித்தார்கள். பொலிஸ்மா அதிபருக்கு பொலிஸ் திணைக்களம் மேற்கொள்ளமுடியாது. அதனை அதற்கு சம்பந்தமான அமைச்சரே மேற்கொள்ளவேண்டும்.

அதேபோன்று ஊழல் ஒழிப்பு பிரிவு என்ற ஒன்றை அமைத்து, அதனை அரசியலாக்கி, நபர்களை தெரிவுசெய்து பொய் வழக்கு தொடுத்தார்கள். அந்த வழக்குகள் தற்போது விசாரணைக்கு வரும்போது, முறையான சாட்சிகள் இல்லாததனால் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள். அது சாதாரண விடயம்.

எனவே ஜனநாயகத்தின் பிரதான மூன்று தூண்களில் ஒன்றாக இருக்கும் நீதிமன்றத்தின் சுயாதீனத்தை பாதுகாக்க அனைவரும் கடமைப்பட்டுள்ளோம். நீதிமன்றங்களை விமர்சித்து, நீதிமன்றம் குறித்து மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையை இல்லாமலாக்க வேண்டாம் எனத் தெரிவித்தார். (ஐ)

# வில்பத்துவில் அளவீடு

(கொழும்பு)

வில்பத்து,கல்லாறு உள்ளிட்ட காடழிப்பு மேற்கொள்ளப்பட்ட பிரதேசத்தைச் சூழவுள்ள பகுதிகளை அளவை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, குறித்த பணிகள் மேலும் இரண்டு மாத காலப்பகுதிக்குள் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், வில்பத்து கல்லாறு காடழிப்பு விடயம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# சவுதிக்கு பணியாளர்களை அனுப்பும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பம்!

(கொழும்பு)

தொழில்களுக்காக, சவுதி அரேபியாவிற்கு பணியாளர்களை அனுப்பும் நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக, சவுதிஅரேபியாவிற்கு பணியாளர்களை அனுப்பும் நடவடிக்கை கடந்த 10 மாத காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

சவுதி அரேபியாவிற்கு பணியாளர்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட போதிலும், வெளிநாட்டு தொழில் வழங்குநர்களுக்கிடையில் காணப்பட்ட சில முரண்பாடுகள் காரணமாக பணியாளர்களை அனுப்பும் நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவின் தலைமையில், இது தொடர்பில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து, சவுதிஅரேபியாவிற்கு பணியாளர்களை அனுப்பும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நாட்டிலுள்ள ஆண் பணியாளர்கள் 60 பேர், சவுதி அரேபியாவிற்கு நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டனர். (ஐ)

# மின் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

முதலீட்டாளர்களின் தொழிற்சாலைகளுக்கு மின் கட்டணத்தை வழங்க முடியாவிட்டால் எதிர்காலத்தில் தொழிலாளர்கள் குறித்து நம்பிக்கை இல்லாமல்போகும். அதனால் மின் உற்பத்தியில் திருப்புமுனையை ஏற்படுத்தும்வகையில் புதுப்பிக்கத்தக்க சக்திகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றோம் என மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை, நீர்வழங்கல், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் அபிவிருத்திக்கு மின்சாரம் முக்கியமாகும். என்றாலும் மின் உற்பத்திக்காக பாரியளவில் நிதி செலவிடப்படுகின்றது. செலவிடப்படும் நிதிக்கேற்ற லாபம் கிடைப்பதில்லை. அதனால் வரலாற்றில் எப்போதும் மின்சாரசபை நட்டத்திலேயே செல்கின்றது. அதனால் மின்சார உற்பத்தியை இலாபமீட்டும் வகையில் செயற்படுத்த புதுப்பிக்கத்தக்க சக்திகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது எனத் தெரிவித்தார். (ஐ)

# ஐ.எஸ்.பயங்கரவாதிகளால் சேதப்படுத்தப்பட்ட அருங்காட்சியகம் மீண்டும் திறப்பு




(பக்தாத்)
ஐ.எஸ்.பயங்கரவாதிகளால் சேதப்படுத்தப்பட்ட அருங்காட்சியகம் சீரமைக்கப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் 2014 ஆம் ஆண்டு ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்பு ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. சிரியாவிலும் ஆதிக்கம் செலுத்திய இந்த பயங்கரவாத அமைப்பு அமெரிக்கா, ரஷ்யா உட்பட நாடுகளின் அதிரடி தாக்குதல்களால் தோற்கடிக்கப்பட்டது.

ஈராக்கில் ஆதிக்கம் செலுத்திய ஐ.எஸ்.பயங்கரவாதிகள் தங்களின் கட்டுப்பாட்டில் ஈராக் இருந்தபோது நூற்றுக்கணக்கான மக்களை கொன்று குவித்தனர்.

மேலும், பல்வேறு புராதன மற்றும் மதிப்பு மிக்க சிலைகளையும், வரலாற்று சின்னங்களையும் அழித்தனர். புராதன சிலைகள் மற்றும் வரலாற்று சின்னங்களை ஐ.எஸ். பயங்கரவாதிகள் அழித்தனர்.

அந்த அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த புராதன சிலைகள் ஐ.எஸ்.பயங்கரவாதிகளால் உடைக்கப்பட்டதையடுத்து, அவற்றை மீண்டும் நிறுவுவதற்கான பணிகளை ஈரான் அரசு மேற்கொண்டு வந்தது.

அதன் பயனாக பயங்கரவாதிகளால் சேதப்படுத்தப்பட்ட மோசுல் நகர அருங்காட்சியகம் மீண்டும் சீரமைக்கப்பட்டு உடைக்கப்பட்ட சிலைகள் மீண்டும் வடிவமைக்கப்பட்டு புதிதாக சிலைகள் நிறுவப்பட்டன.

இந்நிலையில், 6 ஆண்டுகளுக்கு பின்னர் மோசுல் நகரில் உள்ள அருங்காட்சியகம் பொதுமக்கள் பார்வைக்காக கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. (நி)

# மும்பை தாக்குதல் குற்றவாளி; தகவல் தருவோருக்கு 5 மில்.டொலர்




(வோஷிங்டன்)
மும்பை தாக்குதலில் ஈடுபட்ட லஷ்கர் இ தொய்பா அமைப்பின் முக்கிய குற்றவாளி குறித்து தகவல் அளித்தால் 5 மில்லியன் டொலர் பரிசு அளிக்கப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி தாஜ் ஹோட்டல், சி.எஸ்.எம்.டி ரயில் நிலையம் உள்ளிட்ட இடங்களில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 166 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். இதில் 6 அமெரிக்கர்களும் அடங்குவர். 300 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர்.

இந்த தாக்குதலில் தொடர்புடையவர்களில் ஒருவர் பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர் இ தொய்பா அமைப்பின் உறுப்பினர் சஜித் மிர். இவர் மும்பை தாக்குதலில் முக்கிய குற்றவாளி ஆவார்.

இந்நிலையில், மும்பை தாக்குதலில் ஈடுபட்ட லஷ்கர் இ தொய்பா அமைப்பின் முக்கிய குற்றவாளி குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு 5 மில்லியன் டொலர் பரிசு அளிக்கப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. (நி)

# மருந்துகளின் ஏற்றுமதியை முடக்கியது கனடா



(ஒட்டாவா)
பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுக்கு உள்நாட்டிலேயே பற்றாக்குறை ஏற்பட்டமையின் காரணமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை மருந்து ஏற்றுமதியை கனடா மொத்தமாக நிறுத்தியுள்ளது.

அமெரிக்கர்களுக்கு கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சில மருந்துகளுக்கான விலைகளைக் குறைக்க அனுமதிக்கும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் முயற்சிக்கு பதிலளிக்கும் விதமாக கனடா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

கனேடிய சந்தைக்குள் இருக்கும் சில மருந்துகள் கனடாவுக்கு வெளியே நுகர்வுக்காக விநியோகிக்க தடை விதிக்கப்பட்டுள்ளன. அந்த விற்பனை, மருந்து பற்றாக்குறையை ஏற்படுத்தும் அல்லது மோசமாக்கும் என கனேடிய சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பிடனுடனான தனது முதல் விவாதத்தில் ட்ரம்ப் இந்த திட்டத்தை குறிப்பிட்டார்.

இருப்பினும் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ செப்டெம்பர் மாதம் மற்ற நாடுகளுக்கு மருந்து பொருட்கள் உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகக் கூறினார். மேலும் கனேடியர்களின் தேவைகளைப் பாதுகாப்பதே தனது முன்னுரிமை என்றும் குறிப்பிட்டிருந்தார். (நி)

# அணு விஞ்ஞானி கொலை விவகாரம்

## இஸ்ரேலுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும்

### ஈரான் எச்சரிக்கை



(டெஹ்ரான்)
ஈரான் நாட்டின் மூத்த அணு விஞ்ஞானி கடந்த வெள்ளிக்கிழமை மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈரான் நாட்டின் மிக மூத்த அணு விஞ்ஞானியாக செயற்பட்டு வந்தவர் மொஹ்சென் பக்ரிசாதே. ஈரான் அணுகுண்டின் தந்தை என்று வர்ணிக்கப்பட்ட இவர் அந்நாட்டின் இரகசிய அணு ஆயுத திட்டத்திற்கு மூலகாரணமாக இருந்தார்.

இதற்கிடையில், அந்நாட்டின் தலைநகர் டெஹ்ரான் அருகே உள்ள அப்சர்ட் என்ற நகரில் நேற்று காரில் சென்று கொண்டிருந்த மொஹ்செனை குறிவைத்து மர்மநபர்கள் துப்பாக்கிசூடு தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த மொஹ்சென் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் சிகிச்சை பலனின்றி மொஹ்சென் பக்ரிசாதே உயிரிழந்தார். இந்தச் சம்பவம் ஈரான் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், அணு விஞ்ஞானி மொஹ்சென் பக்ரிசாதே கொலைக்கு இஸ்ரேல் தான் காரணம் என ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுகானி குற்றம் சுமத்தியுள்ளார். மேலும், இந்த கொலைக்கு உரிய நேரத்தில் தக்க பதிலடி கொடுக்கப்பட்டு பழி தீர்க்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது கொல்லப்பட்ட அணு விஞ்ஞானி மொஹ்சென் பக்ரிசாதேக்கு 2008 ஆம் ஆண்டு அமெரிக்க அரசு பொருளாதார தடைகளை விதித்தது.

மேலும், மொஹ்சென் பக்ரிசாதேவை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு 'ஈரான் அணு ஆயுதத் திட்டத்தின் தந்தை' என கூறியிருந்தார்.

இதற்கிடையில், மொஹ்சென் பக்ரிசாதேவை கொன்றது இஸ்ரேல் தான் என அமெரிக்க உளவு அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகள் கூறியதாக நியூயோர்க் டைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# சூடானில் தஞ்சம் புகும் எதியோப்பிய அகதிகள்



(எதியோப்பியா)
எதியோப்பிய அரசாங்கத்துக்கும் அந்நாட்டின் தன்னாட்சி பிராந்தியமான டைக்ரே பிராந்திய ஆயுதக் குழுவுக்கும் இடையில் உக்கிர போர் நடைபெறுகிறது.

இந்நிலையில், அருகிலுள்ள சூடானுக்கு அகதிகள் ஆயிரக்கணக்கில் இடம்பெயர்ந்து வருவதால் அவர்களுக்கு உதவ, 150 மில்லியன் டொலர் நிதி தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகளின் அகதிகள் முகாமைத் தலைவர் (UNHCR) பிலிப்போ கிராண்டி தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் நான்காம் திகதி எதியோப்பியாவின் கூட்டாட்சிப் படைகளுக்கும் டைக்ரே மக்கள் விடுதலை முன்னணியின் படைகளுக்கும் இடையில் மோதல் வெடித்தது.

இதனால், 43 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எதியோப்பிய அகதிகள் சூடானில் தஞ்சம் புகுந்துள்ளனர். எனினும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள சூடானால் அகதிகளுக்கு உதவுவதிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. (நி)

# நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம்

## தற்காலத்திற்கு ஏற்றதாக இல்லை- பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடை (தற்காலிக ஏற்பாடு) சட்டமானது, தற்காலத்தில், நவீன பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்க போதுமான ஏற்பாடுகளை கொண்டதல்ல எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் சட்டப் பிரிவின் பிரதானியுமான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அதனால் அந்த சட்டத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் விதமாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டமொன்றினை (சி.டி.ஏ.) கொண்டுவர முயற்சிக்கப்பட்டதாகவும், எனினும் அது தொடர்பில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலமானது, தான் உள்ளிட்ட குழுவினரின் பரிந்துரைகள் பிரகாரம் வரையப்பட்ட சட்டமூலத்தில் இருந்த பல விடயங்களை கொண்டிருக்கவில்லை எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இவ்வாறான பின்னணியில் அந்த சட்டமூலமும் கடந்த ஜனவரி மாதம் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவினால் மீளப் பெறப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதிவிசாரணை ஆணைக்குழுவில் கடந்த வெள்ளிக்கிழமை ஆஜராகி சாட்சியம் வழங்கும் போதே அவர் இந்த விடயங்களை வெளிப்படுத்தினார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில்,

" உண்மையில் சுதந்திரத்துக்கு முன்னர் 1947 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட 25 ஆம் இலக்க பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம்மட்டுமே ஆரம்பத்தில் எமக்கு பயங்கரவாதத்துக்கு எதிராக போராட இருந்த ஒரே சட்டமாகும்.

1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு அறிமுகம் செய்யப்பட்ட பின்னர், அப்போதைய சூழலை அடிப்படையாகக் கொண்டு, குறிப்பாக துரையப்பாவின் கொலை, யாழில் பொலிஸ் அதிகாரிகளின் கடத்தல், கொலை போன்ற சம்பவங்களை மையப்படுத்தியே 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடை சட்டம் கொண்டுவரப்பட்டது.

அது அக்காலத்தில் இருந்த சூழலுக்கு அமைய அப்போதைய விடயங்களை கருத்தில் கொண்டு கொண்டுவரப்பட்டது.

பொது மக்கள் பாதுகாப்பு சட்டம் சுதந்திரத்துக்கு முன்னர் அறிமுகம் செய்யப்பட்டது. இவ்விரு சட்டங்களே பயங்கர வாதத்துக்கு எதிராக நாம் நடவடிக்கைகளை முன்னெடுக்க கைவசம் உள்ள பிரதான சட்டங்களாகும்.

எனினும் தற்போது உலகில் பயங்கரவாத நடவடிக்கைகள் இடம்பெறும்முறைமை, விதத்தை ஆராயும் போது, எம்மிடம் உள்ள பயங்கரவாத தடை சட்டத்தை வைத்துக் கொண்டு அவற்றுக்கு முகம் கொடுக்க முடியாது. அதில் பாரிய குறைபாடுகள் உள்ளன. இதற்கு உதாரணங்களை முன்வைக்கலாம்.

தற்போது நடை முறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தில், பயங்கரவாதம் என்றால் என்ன என்பதற்கு ஒரு வரைவிலக்கணம் இல்லை. இது பிரதான குறைபாடு.

அத்துடன் இந்தச் சட்டத்தின் மூலம் யாருக்கெல்லாம் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என ஆராயும் போது அங்கும் பாரிய குறைபாடுகள் உள்ளன.

எனவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றுக்கான பாரிய தேவை உள்ளது.

இவ்வாறான சூழலிலேயே கடந்த 2016 ஏப்ரல் 21 ஆம் திகதி அப்போதைய பிரதமரால், புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஒன்றினை வரைய குழுவொன்று நியமிக்கப்பட்டது.

சுமார் 28 தடவைகள் இக்குழு கூடி விடயங்களை ஆராய்ந்தது. அதன் பிரகாரம் நாம் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஒன்றினை தயாரித்தோம்.

அதன்படி 2017 செப் டம்பர் 17 ஆம் திகதி அச்சட்ட மூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. பாராளுமன்றுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

எனினும், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சட்ட மூலத்தில், நாம் இறுதியாக இணக்கத்துக்கு வந்து கையளித்த உத்தேச சட்டமூலத்தில் இருந்த பல விடயங்கள் நீக்கப்பட்டிருந்தன. இது அந்த சட்டமூலத்தை பல வீனப்படுத்துவதாக இருந்தது.

எனவே நாம் புதிய சட்டத்தில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் பொலிஸ் அத்தியட்சகர் அல்லது சிரேஷ்ட அத்தியட்சகர் ஒருவருக்கு வழங்கப்படல் வேண்டும் என பரிந்துரைத்த போதும், அந்த விடயம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சட்ட மூலத்தில் இருக்கவில்லை.

உலக நாடுகள் பலவற்றிலும் பொலிஸாருக்கு வழங்கும் வாக்குமூலம் ஏற்றுக்கொள்ளப்படும் முறையிலான விடயங்கள் உள்ளன. பிரித்தானியாவில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு வழங்கும் வாக்குமூலம் கூட செல்லுபடியாகும்.

புதிய உத்தேசச் சட்டத்தில், ஒருவரை கைது செய்த பின்னர் அது தொடர்பில் அவரது நெருங்கிய உறவினர்களுக்கும், மனித உரிமை ஆணைக் குழுவுக்கும் அறிவிக்கும் வண்ணமான ஏற்பாடுகள் இருந்தன என அவர் மேலும் தெரிவித்தார். (நி-7)

# வெளிநாட்டு குற்றங்களுக்கு தண்டனை

(கொழும்பு)

வெளிநாடுகளில் குற்றங்களில் ஈடுபடும் இலங்கையர்களுக்கு அக்குற்றங்கள் தொடர்பில் நாட்டில் சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமென, பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

2006 ஆம் ஆண்டு தண்டனைச் சட்ட திருத்தத்திற்கமைய, வெளிநாடுகளில் இலங்கையர்கள் செய்யும் குற்றங்கள், நாட்டின் சட்டத்துக்கமைய தவறெனின், குற்றமிழைத்த இலங்கையர்களுக்கு எதிராக நாட்டில் சட்டநடவடிக்கை எடுக்க முடியும் என தெரிவித்துள்ளார். (ஜ)

# சந்தை திறப்பு விரைவில்

(பேலியகொட)

பேலியகொட மீன் சந்தையை மீள திறப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.பேலியகொட மீன் சந்தையை விரைவாக மீள திறக்கும் முகமாக, சுகாதார துறையினரால் அங்கு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

சுகாதாரத்துறையினரால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மீன் விற்பனையாளர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார். சுகாதார அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் பேலியகொட மீன் சந்தை மீள திறக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# இலங்கை-மாலைதீவுக்கிடையில் நல்லுறவை பேணுவது குறித்து அதிக அவதானம்

(கொழும்பு)

போதைப்பொருள் வியாபாரம், பாதாள உலகக் குழுவினர் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளை இல்லாதொழித்தல், சிறைச்சாலை மறுசீரமைப்பு, பயங்கரவாதம், தீவிரவாதம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பிலும், இரு நாடுகளுக்கு இடையில் ஒத்துழைப்பு மேம்படுத்தல் குறித்து மாலைதீவின் பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்ட தூதுக் குழுவினருக்கும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம் பெற்றது.



மாலைதீவின் பாதுகாப்பு அமைச்சர் மொஹமட் டிடி உள்ளிட்ட தூதுக்குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை விஜயராம மாவத்தையில் உள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பிரதமரை சந்தித்தனர்.

இதில் போதைப்பொருள், பாதாள உலகக் குழுவினர் உள்ளிட்ட சட்டவிரோத வியாபாரத்தை இல்லாதொழித்தல் மற்றும் சிறைச்சாலை மறு சீரமைப்பு பயங்கரவாத தீவிரவாதம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பிலும் இரு நாடுகளுக்கிடையில் நல்லுறவை மேம்படுத்தல் குறித்து அதிக அவதானம் செலுத்தப்பட்டது. (ஜ-4)

# தம்புள்ளயில் பாடசாலைகளுக்கு பூட்டு

(தம்புள்ள)

தம்புள்ள கல்வி வலயத்திற்கு உட்பட்ட அனைத்து பாடசாலைகளையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த பாடசாலைகளை இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் திங்கட்கிழமை வரை ஒரு வாரத்திற்கு மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா அச்சம் அதிகரித்து வருவதனால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் பெரும்பாலானோருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், பரிசோதனை முடிவுகள் வெளியானதிலேயே வர்த்தகர்கள் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# மணல் வியாபாரிகளால் கொல்லப்பட்ட கான்ஸ்டபிள்

(கொழும்பு)

குருநாகல் - கொபேய்கனை - ஹாத்தலவ பிரதேசத்தில்தெதுறு ஓயாவில் இடம்பெறும் மணல் கொள்ளையை சுற்றிவளைக்கச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், மணல் வர்த்தகர்களால் பயன்படுத்தப்படும் டிப்பர் ரக வாகனம் ஒன்றில் மோதி கொல்லப்பட்டார்.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்ற போது, ஐந்து பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று குறித்த இடத்துக்கு சென்றுள்ளது.

இதன்போது குறித்த கான்ஸ்டபிள் மீது டிப்பர் ரக வாகனத்தை ஏற்றி அவரை கொலை செய்துவிட்டு, அதன் சாரதி அங்கிருந்து தப்பிச் சென்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ஜ-4)

## லங்கா பிரீமியர் லீக்

# யாழ்ப்பாணம் ஸ்ராலியன்ஸ் அணி அபார வெற்றி



லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது போட்டியில் யாழ்ப்பாணம் ஸ்ராலியன்ஸ் அணி எட்டு விக்கெட்டுகளால் காலி கிளாடியேற்றர்ஸ் அணியை வீழ்த்தியுள்ளது.

லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகியது. இந்நிலையில் இரண்டாவது போட்டி அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கில் கடந்த 27 ஆம் திகதி மாலை நடைபெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற காலி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி, காலி அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.


அணிசார்பாக, சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அப்ரிடி 58 ஓட்டங்களைப் பெற்றதுடன் குணதிலக 38 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில், யாழ்ப்பாண அணி சார்பாக ஒலிவியர் நான்கு விக்கெட்டுகளைக் கைப்பற்றியதுடன் வனிந்து ஹசரங்க இரண்டு விக்கெட்டுகளையும் திசர பெரேரா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்நிலையில், பதிலுக்கு 176 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அவிஸ்க பெர்னாண்டோ அதிரடியாக விளையாடினார்.

இந்நிலையில் யாழ்ப்பாண அணி 19.3 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. (ஜ)

# தனிமைப்படுத்தப்படாமல் அப்ரிடிக்கு விளையாட அனுமதி



லங்கா பிரீமியர் லீக் (எல்.பி.எல்) 2020 கிரிக்கெட் போட்டியில் காலி கிளாடியேட்டஸ் அணியின் தொடக்க போட்டியில் விளையாட பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஷஹித் அப்ரிடிக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி அம்பாந்தோட்டை, சூரியவெவ மைதானத்தில் நடைபெறும் இரண்டாவது எல்.பி.எல்.போட்டியில் திஸர பெரேரா தலைமையிலான யாழ்ப்பாணம் ஸ்டாலியன்ஸை அப்ரிடி தலைமையிலான காலி கிளாடியேட்டர்ஸ் அணி எதிர்கொள்கின்றது.

இப் போட்டியில் காலி கிளாடியேட்டர்ஸ் அணிக்காக விளையாட பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவான் ஷஹித் அப்ரிடி கடந்த புதன்கிழமை இலங்கை வந்தார்.

இந்நிலையில், இவருக்கு வெளிநாட்டு வீரர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டாய 7 நாள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தாமல் எல்.பி.எல். போட்டிகளில் விளையாட அனுமதிக்கப்பட்டுள்ளது.

காலி கிளாடியேட்டர்ஸ் அணியின் உரிமையாளர் நபீல் ஹாஷ்மி, அப்ரிடி கொரோனாவிற்கான சிறப்பு சோதனைகளின் பின்னர் போட்டியில் விளையாட அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.

அத்துடன் அப்ரிடிக்கு பி.சி.ஆர்.சோதனைகள் உள்ளிட்ட சிறப்பு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக எல்.பி.எல். போட்டிகளுக்கு பொறுப்பான வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஜ)

# நியூசிலாந்து சென்ற பாகிஸ்தான் அணியில் 6 பேருக்கு கொரோனா

நியூசிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் அணியில், ஆறு பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

புறப்படுவதற்கு முன்பாக பாகிஸ்தானில் நடத்தப்பட்ட கொரோனா பரிசோதனையில் எந்த வீரருக்கும்பாதிப்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால், நியூசிலாந்துக்கு சென்றதும் நடத்தப்பட்ட பரிசோதனையில் 6 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் தனியாக வேறு இடத்தில் தனிமைப்படுத்தப்பட்டு இருப்பதாக நியூசிலாந்து கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

எனினும், இதில் வீரர்கள் எத்தனை பேர், பயிற்சி உதவியாளர் எத்தனை பேர் என்ற விபரம் வெளியிடப்படவில்லை.

நியூசிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடர் மற்றும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இதில் முதலாவதாக நடைபெறும் ரி-10 தொடரின் முதல் போட்டி, எதிர்வரும் மாதம் 18ஆம் திகதி ஆக்லாந்தில் நடைபெறவுள்ளது. (ஜ)

# அபராதம்

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், விளையாடிய இந்தியக் கிரிக்கெட் அணிக்கு சர்வதேச கிரிக்கெட் சபை அபராதம் விதித்துள்ளது.

இந்தியக் கிரிக்கெட் அணி பந்து வீச்சாளர்கள், 50 ஓவர்களை வீச கூடுதல் நேரம் எடுத்துக்கொண்டதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதையடுத்து இந்திய அணி வீரர்களுக்கு போட்டி ஊதியத்திலிருந்து 20 சதவீதம் அபராதம் விதிக்கப்படுவதாக சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. சிட்னி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில், அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி, 66 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# தடைகளை உடைத்தெறிந்து வெற்றியை நோக்கி பயணிப்போம்




(கொழும்பு)

தீர்வுகளை அடைவதற்கான தடைகளை உடைத்தெறிந்து வெற்றியை நோக்கி பயணிப்பதே எமது உறுதியான கொள்கை என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமானஜீவன்தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொட்டகலை- டெரிக்கிளயார் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

குறைகளை மட்டும் கூறிக் கொண்டிருப்பது தலைமைத்துவ பண்பு கிடையாது. தீர்வுகளை அடைவதற்காக தடையாக உள்ள காரணிகளை உடைத்தெறிந்து பயணிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# சீனாவிடமிருந்து கடன் எதிர்பார்க்கும் இலங்கை



(கொழும்பு)

சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து 700 மில்லியன் டொலர்கள் கடனை எதிர்பார்ப்பதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடந்த ஒக்டோபர் மாதம் இந்தக் கடன் தொகை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் தற்போது டிசெம்பர் மாதத்திலேயே கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகையில் 500 மில்லியன ரூபா டொலர்களாகவே கிடைக்கும் என்றும் எஞ்சிய தொகை சீனாவின் ரென்மன்பியில் கிடைக்கும் என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான கடன்களை வழங்குவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியானது 165 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு இம்மாதத்தின் நடுப்பகுதியில் அனுமதி அளித்துள்ளது.

இதேவேளை, அடுத்த வருடத்தில் கடன்களை செலுத்துவதற்காக நான்கு பில்லியன் டொலர்கள் தேவையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# அரச,தனியார் நிறுவனங்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் வாய்ப்பு

(கொழும்பு)

போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த பகுதிகள் திறக்கப்பட்ட காரணத்தினால் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக இலங்கை சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதனூடாக குறித்த பகுதிகளில் மீண்டும் அவதானமான நிலைமை. ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விசேடமாக கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட துறை முகத்திற்கு அருகில் உள்ள பகுதிகளில் தொடர்ந்தும் கட்டுப்பாடின்றி தொற்றாளர்கள் பரவுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிறுவனங்கள் திறக்கப்படும் சந்தர்ப்பங்களில் சுகாதார நடவடிக்கைகள் பின்பற்றப்படுகின்றதா? என்பது தொடர்பில் அதிக அவதானம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ)

# கிராம மக்களின் முன்மொழிவுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்

## பசில் வலியுறுத்து

**(கொழும்பு)**

**வரவு -செலவுத் திட்டத்தை செயற்படுத்தும்போது கிராமிய குழுக்களால் முன்வைக்கப்படும் அபிவிருத்தி முன்மொழிவுகளுக்கு முன்னுரிமை வழங்கி மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் செயற்படுத்த வேண்டும் என பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

"இம்முறை மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், கிராமத்திலுள்ள சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பிற அமைப்புகளின் பங்களிப்புடன், கிராமிய குழுக்களுக்கு முன்வைக்கப்படும் கிராம மக்களின் முன்மொழிவுகளை மேலும் முறையாக ஆய்வு செய்து, அதனை முன்னுரிமை அளிப்பதனையே நாம் எதிர்பார்க்கிறோம்.

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் கிராமிய உற்பத்தித்துறையின் வளர்ச்சிக்கு மேலும் 2 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் "மகளிர் தொழில்முனைவோரை உருவாக்கி அவர்களது உற்பத்திகளை விநியோகிப்பதற்கு கிராமிய மட்டத்தில் விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்படும்.

அனைத்து கிராமங்களுக்கும் சென்று கிராம மக்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுத்து அவர்களின் பங்கேற்புடன் 'வேலைத் திட்டத்துடன் மீண்டும் கிராமத்திற்கு' செயற்றிட்டத்தை செயற்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இந்த வரவு- செலவுத் திட்டம் உண்மையான நாட்டின் அடையாளம், கலாசாரம் மற்றும் உள்ளூர் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட வரவு-செலவுத்திட்டம். அதற்கு மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் தலையிடுமாறு அரச அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு அமைச்சுக்களுக்கிடையேயும் முறைகள் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.



அதேபோன்று கிராம மட்டத்திலும் பல்வேறு கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் ஏற்படக் கூடும். அதனால் கிராமத்தின் பிரதான குழுக்கள் ஊடாக முன்னுரிமையளித்து, பிரதேச அபிவிருத்தி குழுக்களில் அங்கீகரித்து வரவு-செலவுத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும். இதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை இன்னும் திறம்பட மேற்கொள்ள முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# தெற்காசியாவின் மின்கட்டணம் கூடிய நாடு இலங்கை

## செனவிரத்ன சுட்டிக்காட்டு



(கொழும்பு)

மின் உற்பத்தி நிலையங்களால் நாட்டுக்கு வருமானம் இல்லாவிட்டாலும் பாரியளவில் நட்டம் ஏற்படுவதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் தெற்காசியாவின் மின் கட்டணம் கூடிய நாடு இலங்கையாகும் என ஆளுங்கட்சி உறுப்பினர் ஜோன் செனவிரத்ன சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு-செலவு திட்டத்தில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை, நீர்வழங்கல், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின் உற்பத்தி நிலையங்கள் நாட்டை நாளுக்கு நாள் கடன் நிலைக்கு கொண்டுசெல்லும் நிறுவனங்களாகும். இந்த நிறுவனங்களால் இலாபத்தை எதிர்பார்க்க முடியாது. அதனால் இலாபம் இல்லாவிட்டாலும் ஏற்படும் நட்டத்தை கட்டுப்படுத்திக்கொள்ள அனைத்து அரசாங்கங்களும் நடவடிக்கை எடுத்த போதும் எதிர்பார்த்த பெறுபேற்றை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

மின்சாரசபை கூடுதலாக செயற்படுவது டீசல் மூலமாகும். அதற்காக பாரியளவில் நிதி செலவிடப்படவேண்டி ஏற்படுகின்றது. இதற்காக செலவிடப்படும் நிதியை மின் கட்டணத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாது. நிவாரண அடிப்படையிலேயே வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகின்றது.

அப்படி இருந்தும் தெற்காசியாவில் மின்கட்டணம் கூடிய நாடு இலங்கையாகும். அதனால் எமது நாட்டுக்கு வரும் முதலீட்டாளர்களும் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும்போது மின் கட்டணம் தொடர்பில் மாற்றுவழி ஒன்றை மேற்கொள்ளவேண்டும் என்றே தெரிவிக்கின்றனர்.

எனவே மின் உற்பத்திக்கு டீசல் செலவிடப்படுவதை குறைக்க நடவடிக்கை எடுப்பதன்" மூலமே ஏற்படும் நட்டத்தை கட்டுப்படுத்தலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஏற்றுக் கொள்ளுங்கள்!

எங்களில் சிலபேர் எப்படி என்றால் அவர்களுக்கு எதிரிலே உள்ளவர் முழுவதும் எதிரியாக தெரிவார்கள். பார்ப்பது முழுவதும் பகையாக தெரியும். குறை எங்கேயிருக்கின்றது என்று நினைக்கின்றீர்கள்? வெளியிலே இல்லை..அவர்களிடம் தான் இருக்கின்றது.ஏற்றுக் கொள்ளுகின்ற சுபாவம் இல்லை என்றால் இது மாதிரி சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும்.

உன்னைச் சுற்றியிருக்கின்ற எல்லாமே உனக்கு வெறுப்பைத் தருவதாக நீ உணர்ந்தால்...உனக்குள் நீ வெறுப்புடன் இருக்கின்றாய் என்பதை அது காட்டுகின்றது என்கின்றார் ஓஷோ.

அவர் ஒரு சமயம் ஒரு கிராமத்திற்குப் போயிருக்கின்றார்.அங்கே ஒரு ஓய்வு விடுதியிலே தங்கியிருந்தாராம். மிகவும் சிறிய கிராமம். அங்கே நாய்கள் மிகவும் அதிகம்.ராத்திரி ஆனால் எல்லா நாயும் அங்கே வந்து மரத்தடியிலே கூடிவிடும்.வாள் வாள் என்று குரைக்க ஆரம்பித்துவிடும். அந்த ஓய்வு விடுதியிலே மந்திரி ஒருத்தரும் வந்து தங்கியிருக்கின்றார்.

அவருக்கு அந்த நாய்கள் குரைக்கின்றது பெரிய தொந்தரவாக போய்விட்டது.தூங்க முடியவில்லை.பாதி ராத்திரியிலே எழுந்து இவரிடம் வந்திருக்கின்றார்.அந்த சமயம் இவர் அசந்து தூங்கிக் கொண்டு இருந்திருக்கின்றார்.

இவரை எழுப்பிச் சொன்னாராம் அவர்.

சுற்றிலும் இவ்வளவு சப்தங்களுக்கு இடையில் உங்களால் எப்படி இவ்வளவு நிம்மதியாக தூங்க முடிகின்றது? என்று கேட்டிருக்கின்றார்.அதற்கு இவர் சொன்னார்.அந்த நாய்கள் உங்களுக்காக கூடவில்லை.உங்களை தொந்தரவு செய்ய வேண்டும் என்பதற்காக அவை இங்கே வரவில்லை. அவை பத்திரிகையெல்லாம் படிக்கின்றதில்லை.அதனால் ஒரு மந்திரி இங்கே வந்து தங்கியிருக்கின்றார் என்பது அவைகளுக்குத் தெரியாது.அவைகளுக்கும் உங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது.அவையெல்லாம் தங்கள் வேலையை செய்துகொண்டிருக்கின்றது. நீங்கள் ஏன் துன்பப்படுகின்றீர்கள்? என் றார்.

அவை எல்லாம் குரைத்து சத்தம் போட்டுக் கெண்டிருந்தால் நான் எப்படி துன்பப்படாமல் இருக்க முடியும்? என்றார்அவர். இவர் அதற்கு விளக்கம் கொடுத்தார்.

நீங்கள் அவைகள் குரைப்பதை எதிர்த்துப் போராடாதீர்கள். நீங்கள் அவையோடு போராடுகின்றீர்கள். அது தான் பிரச்சினையை உருவாக்குகிறது. பிரச்சினைகளை உருவாக்குவது அவைகளின் சத்தம் இல்லை. உங்களுடைய போராட்டம் தான்... அந்த சத்தம் உங்களை தொந்தரவு செய்யவில்லை.. அந்த சத்தத்தினால் நீங்களே உங்களை தொந்தரவு செய்கின்றீர்கள்.

நீங்கள் அந்த சத்தத்திற்கு எதிராக இருக்கின்றீர்கள். நீங்களாகவே உங்களு க்குள்ளே ஒரு நிபந்தனையை ஏற்படுத்திவிட்டீர்கள். இந்த நாய்கள் குரைப்பதை நிறுத்தினால் தான் நான் தூங்க முடியும் என்கின்ற நிபந்தனையை நீங்களே உங்களுக்கு விதித்துக் கொண்டீர்கள்.

உங்கள் நிபந்தனையை நாய்கள் கவனிக்கப் போவதில்லை. ஆனால் நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? உங்கள் நிபந்தனை நிறைவேறினால் தான் தூங்க முடியும் என்று நினைக்கின்றீர்கள். அதனால் உங்கள் நிபந்தனை தான் உங்களைத் தொந்தரவு செய்கிறது. நீங்கள் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? நாய்கள் குரைக்கின்றதை ஏற்றுக் கொள்ளுங்கள். அவைகள் சத்தத்தை நிறுத்தினால் தான் தூங்குவேன் என்ற நிபந்தனையை விலக்குங்கள். நம்மைச் சுற்றியுள்ள உலகத்தை நமக்குத் தகுந்த மாதிரி நிர்ப்பந்தப்படுத்த வேண்டும் என்று நினைக்கின்றோம் பாருங்கள்.. அது முடியாத காரியம்.எது எப்படி இருக்குமோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளப பழகிக் கொள்ள வேண்டும்.

ஒருத்தர் வந்தார். சேர் எங்கள் வீட்டிலே தினம் பயங்கரமான குறட்டை சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும். இருந்தாலும் அது எனக்குத் தொந்தரவாக தெரியாது...தினமும் கேட்டுப் பழகிப் போச்சு.. என்றார்.குறட்டை விடுவது யார்..உங்கள் மனைவியா என்று கேட்டேன்.இல்லைங்க... நான் தான் அது..என்று சொல்லிவிட்டு அசட்டுத்தனமாக சிரிக்கின்றார்.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

07

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



● பாராளுமன்றத்தின் துணைப் பணியாட்டொகுதியினர்

● பாராளுமன்றப் பொலிஸ், பாராளுமன்ற ஊடகவியலாளர்கள்.

● பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியின் ஓய்வு பெற்ற பணியாளர்கள்

**இவற்றைவிட படைக்கலச் சேவிதரின் பொறுப்புக்களாக**

● பாராளுமன்ற சுற்றாடலினுள் தளத்தில் வாகனங்கள் தரித்து நிற்பதற்கான கட்டுப்பாடு.

● தீயணைப்பு உபகரணங்களைப் பேணுவது தொடர்பான வேலை ஒத்திகை நடத்துதல் மற்றும் தீயணைப்பு பயிற்சிகள்.

● எக்ஸ் கதிர் பரிசோதிப்பு முறைமையின் பேணுகை தொடர்பான வேலை.

● பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்படும் சர்வதேச மாநாடுகள், கருத்தரங்குகள் போன்ற வைபவ ரீதியான நிகழ்வுகள் தொடர்பான பாதுகாப்பு சம்பந்தமான அனைத்து பணிகளையும் நிறைவேற்றுதல்.

● விடுமுறை நாட்கள் உள்ளடங்கலாக கடமை நேரம் அல்லாத நேரங்களில் பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்கு எழுந்தமானதாக விஜயம் செய்வதும் மற்றும் விடுமுறை நாட்களிலும் அலுவலக நேரத்துக்குப் பின்னரும் பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் அவசர நிலைமைகளின் போது தேவையான கருமங்களை நிறைவேற்றல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

● செயற்றிட்டம், முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் ஏனைய உரிய அறிக்கைகள், பத்திரங்கள், கூட்ட அறிக்கைகள், கடிதங்கள் போன்றவற்றை தயாரித்தல்.

● சபையின் தளபாடங்கள் மற்றும் பொருத்துறுப்புகள் என்பவற்றைப் பாதுகாப்பாக பேணும் பொறுப்பு.

● சபாநாயகர் மற்றும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ஆகியவர்களின் பணிப்புரையின் மீது உத்தியோகபூர்வ ஈமச்சடங்குகளுக்காக மலர் வளையங்களை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளை செய்தல்.

● காட்சிப் பலகைகள் போன்றவற்றுடன் தொடர்பான கருமங்கள்.

● உரிய நேரத்தில் துல்லியமான முறையில் சபை பற்றியும் அதன் உறுப்பினர்கள் பற்றியும் தகவல்களை வழங்குதல்.

● பாராளுமன்றம் பற்றிய விவரணம் தொடர்பான கருமங்கள்.

● பணியாட்டொகுதியின் (140 பேர்) ஒட்டுமொத்த கட்டுப்பாடும் முகாமைத்துவமும்.

● கலரி அனுமதிப் பத்திரங்கள், ஏனைய அனுமதிப் பத்திரங்கள், படிவங்கள் போன்றவற்றுடன் தொடர்பான திணைக்களத்தின் அனைத்து அச்சுப்பணிகளையும் மேற்கொள்ளுதல்.

● திணைக்களத்தில் பணியாட்டொகுதியின் சம்பளப் படியேற்றம், பதவியுயர்வு, பயிற்சி வசதிகள் ஆகியவற்றை வழங்குவதற்கு சிபாரிசு செய்தல்.

● ஏனைய அலுவலகங்களுக்கு பாராளுமன்ற சேவை உதவியாளர்களின் மனிதவலு உதவிகளை வழங்குதல்.

● திணைக்களத்தின் பொருட் பதிவேட்டுக் கட்டுப்பாடு.

● திணைக்களத்தின் வருடாந்த நகல் மதிப்பீடுகளை தயாரித்தல்.

● தற்காலிக வர்ண அனுமதிப் பத்திரங்களை வடிவமைத்து அச்சிட்டு விநியோகித்தல்.

● பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாராளுமன்ற பணியாட்டொகுதியினதும் வரவை உறுதிசெய்தல்.

● பாராளுமன்ற உறுப்பினர்களின் படங்களை பாராளுமன்ற இணையத் தளத்திற்கும் பாராளுமன்ற பணியாட்டொகுதியின் படங்களை பாராளுமன்ற இணையத்தள நுழைவாயிலுக்கும் பதிவேற்றம் செய்தல்.

● பாராளுமன்றத்துக்கான உபகரணங்கள் / களஞ்சியம் மற்றும் ஏனைய பொருட்கள் /சேவைகள் ஆகியவற்றின் கொள்வனவு தொடர்பாக பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபையில் தவிசாளராக சேவை புரிதல்.

● திணைக்களத்தின் பணியாட்டொகுதியினருக்கு காலத்துக்கு காலம் உள்ளக சுற்றறிக்கைகளை விநியோகித்தல்.

● வரவேற்பாளர்கள், X-கதிர் பரிசோதகர்கள், தொலைபேசி இயக்குநர்கள் மற்றும் பாதுகாப்பு அலுவலர்கள் ஆகியோருக்கான மாதாந்த வேலை முறையேட்டைத் தயாரித்தல்.

● பாராளுமன்ற செயலாளர் நாயகத்துடனான கூட்டங்கள் உள்ளடங்கலாக பணியாட்டொகுதியினருக்கான கூட்டங்களை கிரமமாக ஏற்பாடு செய்வதும் அத்தகைய பணியை நிறைவேற்றுவதும்.

● நினைவுப் பொருள் விற்பனை நிலையம் / களஞ்சியத்தின் கட்டுப்பாடும் முகாமைத்துவமும்.

● கோவைச் சுட்டியைப் பேணுவது, கடமைகளின் கையளிப்பு மற்றும் கடமைகளின் பட்டியல் / வேலை முறையேடு மற்றும் உரிய திருத்தங்கள் ஆகியவற்றை திணைக்களத்தில் பணியாட்டொகுதியினருக்கு காலத்துக்கு காலம் விநியோகித்தல்.

● பாராளுமன்ற உறுப்பினர்களின் பூட்டுப்பெட்டிகள் உள்ளடங்கலாக பாராளுமன்ற உறுப்பினர்களின் பொழுதுபோக்கு அறையின் கட்டுப்பாடும் முகாமைத்துவமும்.

● நுழைவாயிலில் உள்ள வரவேற்பு கரும பீடத்துக்கு தினமும் கிடைக்கும் மின்னஞ்சல், கடிதங்கள், செய்தித்தாள்கள் போன்றவற்றை வகைப்படுத்தி விநியோகிக்கும் பணி தொடர்பாக பணிப்புரை வழங்குதல் / மேற்பார்வை செய்தல்.

● பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் தளபாடங்களை மினுக்கும் அனைத்து பணிகளும்.

● சபாநாயகர், பாரா்ளுமன்ற உறுப்பினர்கள் பணியாட்டொகுதியினர் போன்றவர்களுக்கு உரிய நேரத்தில் வினைத்திறனான தொலைபேசி சேவைகளை வழங்குதல்.

● கழிவுத் தாள்கள்/ CD/ DVD ஆகியவற்றை அப்புறப்படுத்தும் பணிக்கு வசதியளித்தல்.

● பாதுகாப்பு அலுவலர்களையும் உரிய பணியாட்டொகுதியினரையும் விடுமுறை நாட்கள் உள்ளடங்கலாக அலுவலக நேரங்கள் அல்லாத நேரங்களில் பணியாற்றுவதற்காக ஒதுக்குதல்.

● படைக்கலச் சேவிதர் திணைக்களம் இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம் நிர்வாகத் திணைக்களம் ஹன்சாட் திணைக்களம் ஆகியவற்றின் பணிகளை நிறைவேற்றும் சீருடை அணியும் பணியாட்டொகுதியினரின் சீருடைகளை துவைத்தல் தொடர்பான பணி.

● கொள்வனவுகளுக்கான/ பெற்றுக் கொள்ளப்பட்ட சேவைகளுக்கான கட்டண கொடுப்பனவுகளை சிபாரிசு செய்வதும் அங்கீகரிப்பதும்.

● திணைக்கள மட்டத்திலான விசாரணைகளின் போது பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட விசாரணை அலுவலராக /வழக்குத் தொடுக்கும் அலுவலராக சேவை புரிதல்.

**படைக்கலச் சேவிதரின் ஆசனம் (பழைய பாராளுமன்றம்)**

● தேக்கினால் செய்யப்பட்ட இந்த ஆசனம் பழைய பாராளுமன்றக் கட்டடத்தின் சபா மண்டபத்தில் படைக்கலச் சேவிதரால் பாவிக்கப்பட்டது. கடும் நீலத்தில் மெத்தையமைவிக்கப்பட்ட இந்த ஆசனம் ஐந்து அடி உயரமானது.



படைக்கலச் சேவிதரின் ஆசனம்
(பழைய பாராளுமன்றம்)

**"செங்கோல்"**

பாராளுமன்றத்தின் அதிகாரச் சின்னமாகத் திகழும் செங்கோல் 1949 ஜனவரி 11 ஆம் திகதி பிரித்தானிய மற்றும் வட அயர்லாந்து பாராளுமன்றத்தின் பொதுச் சபையால் இலங்கைப் பிரதிநிதிகள் சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

அன்றைய பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் சேர்.அலெக்ஸாண்டர் பிரன்சிஸ் மொலமுரே தலைமை தாங்கிய பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் பொதுச் சபையின் பிரதிச் சபாநாயகர் மேஜர் ரைட் ஜேம்ஸ் மில்னர் இன் தலைமையிலான தூதுக்குழுவினர் அப்போதைய படைக்கலச் சேவிதர் எம். இஸ்மாயில், MBE இற்கு இச்செங்கோலைக் கையளித்தனர். செங்கோல் முன்னால் வைக்கப்பட்டு சபை கூட்டப்பட்ட முதலாவது சந்தர்ப்பமாக அது காணப்பட்டது.

செங்கோலின் அப்போதைய பெறுமதி 2,500 பவுண்களாகக் காணப்பட்டது. அது 28 இறாத்தல் நிறையைக் கொண்டுள்ளதோடு 48 அங்குல நீளமுடையது. கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியின் கலைத் துறையில் கடமையாற்றிய மறைந்த எஸ். பி. சார்ள்ஸ் மற்றும் அவருடைய சக பணியாளர்களால் தயாரிக்கப்பட்ட வரைபை செங்கோலின் வடிவமைப்பு அடிப்படையாகக் கொண்டிருந்தது.

அப்போதைய தொல்பொருளியல் திணைக்கள ஆணையாளர் கலாநிதி செனரத் பரணவிதானவின் அங்கீகாரத்தை வடிவமைப்பு தொடர்பான புராணயியல் கொண்டிருந்தது.

பக்கிங்ஹாம் மாளிகைக்கு ஆபரணங் களை விநியோகிக்கும் இங்கிலாந்திலுள்ள M/S Gerrads (Pvt) Ltd இன் பிரபல்யமான பொற்கொல்லர் டேனியல் இஸ்பென்சரால் இச்செங்கோல் தயாரிக்கப்பட்டது.

(தொடரும்...)

# இந்தியாவிற்கு கிழக்கு முனையத்தை

## முழுமையாக வழங்கவில்லை

(கொழும்பு)

**கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் குறுகிய கால ஒப்பந்த அடிப் படையில் இந்தியாவுக்கு வழங்கவே எதிர் பார்க்கப்பட்டுள்ளது என கப்பற்துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கிழக்கு முனையத்தின் 49 வீத உரிமம் இந்தியாவுக்கும் 51 வீத உரிமம் இலங்கை துறைமுக அதிகார சபை வசம் இருக்கும் வகையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.

கிழக்கு முனையம் அபிவிருத்தி தொடர்பில் ஆராய அமைச்சின் செயலாளர்கள் மற்றும் துறைமுக அபிவிருத்தி துறை சார் நிபுணர்களை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குழுவின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (ஐ-4)

# ஆலய வழிபாடு

## ஏன் – எதற்கு – எப்படி



## பூஜை செய்வது எப்படி?

(தொடர்ச்சி)

**6.அபிஷேகம்:**

எண்ணெய், மாப்பொடி, நெல்லி முள்ளி, மஞ்சள் பொடி, பஞ்ச கவ்யம், பஞ்சாமிர்தம், பால், தேன், தயிர், கரும்பு, வாழைப்பழம், எலுமிச்சம், பழச்சாறு, இளநீர், அன்னம், விபூதி, சந்தனம், பத்ரோதகம், கும்போதகம் ஆகிய வற்றை வரிசைப்படி அபிஷேகம் செய்ய வேண்டும். அப்போது தேனு முத்திரை காட்டப்படுதல் வேண்டும்.

கை விரல்களால் பசுவின் மடி நான்கு காம்போடு இருப்பது போல காட்டுவது தேனு முத்திரையாகும். அப்போது இறைவன் இவ்விடத்தில் அமர்ந்து எங்கள் பூஜையை ஏற்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ள வேண்டும்.

**7.பாத்தியம்:**

சந்தனம், அறுகு, வெண்கடுகு, விலாமிச்சை இந்த 4 பொருட்களையும் பாத்திய நீரில் கலந்து சுவாமி பாதத்தில் இட வேண்டும். ஆன்மாக்களாகிய நாம் சிவபதம் அடையவே இந்த பாத்தியம் கொடுக்கப்படுகிறது. அப்போது 'நம' என்பதோடு கூடிய இருதய மந்திரம் சொல்ல வேண்டும்.

**8.ஆசமனீயம்:**

ஏலக்காய், கிராம்பு, பச்சைக் கற்பூரம், நாவல்பழம், ஜாதிக்காய், குங்குமப்பூ ஆகியவற்றை ஒரு பாத்திரத்தில் போட்டு சுத்தமான தண்ணீர் ஊற்றி நிரப்பி இறைவன் பாதத்தில் வைக்க வேண்டும். அப்போது சம்கிதா மந்திரம் சொல்ல வேண்டும். ஆன்மாக்கள் பரமாத்மாவின் முகத்தில் சேர்த்தல் என்ற பாவத்தில் இந்த பூஜை செய்யப்படுதல் வேண்டும்.

**9.அர்க்கியம்:**

எள், நெல், தர்ப்பை நுனி, தண்ணீர், பால், அட்சதை, வெண்கடுகு ஆகியவற்றை ஒரு பாத்திரத்தில் போட்டு சுத்தமான தண்ணீர் ஊற்றி அர்க்கியம் கொடுக்க வேண்டும். மூல மந்திரத்துடன் ஸ்வாகா என்ற மந்திரம் சேர்த்து சொல்ல வேண்டும்.

அபிஷேகம் ஆரம்பம் - முடிவு, நைவேத்தியம் ஆரம்பம் - முடிவு, தூபம் தீபம் ஆரம்பம் - முடிவு, பூஜைகள் ஆரம்பம் - முடிவு ஆகிய சமயங்களில் அர்க்கியம் கொடுக்க வேண்டும்.

**10.புஷ்பதானம்:**

அழகான பூக்கள், மலர்களால் இறைவனை அலங்கரிக்க வேண்டும். அலங்காரத்தில் கடவுளை இரசித்துப் பார்க்க வேண்டும்.

செண்பகம், அறுகு, புன்னாகம், நந்தியாவட்டை, பாதிரி, பிரகதி, அரளி, தும்பை ஆகிய 8 வகை பூக்களுடன் அட்சதை சேர்த்து மூல மந்திரத்துடன் "வௌவுட்" என்ற மந்திரம் உச்சரித்து மலர்களை சமர்ப்பிக்க வேண்டும். இது பேரின்ப வீட்டை அடைய செய்யும். சுவாமிக்கு பத்மாசனத்தில் ஆவாகனமும் ஆனந்த சயனத்தில் அபிஷேகமும் விமலாசனத்தில் அர்ச்சனையும் யோகாசனத்தில் நைவேத்தியமும் சிம்மாசனத்தில் வஸ்திர சமர்ப்பணமும் செய்ய வேண்டும்.

**11.தூபம்:**

கருவறை மூலவருக்கு சாம்பிராணி புகை போட்டு வழிபடுவதே தூபம் எனப்படும். இது நமது அஞ்ஞானத்தை கிரியா சக்தியால் அகற்றலாம் என்ற தத்துவத்தை உணர்த்துகிறது.

அகில், கீழாநெல்லி, சாம்பிராணி, குங்கிலியம் ஆகியவை சிறந்த தூபப் பொருட்களாகும். தூபம் போட்டு இறைவனை வழிபட்டால் பாவம் விலகும் என்பது ஐதிகமாகும்.

தூபம் காட்டும்போது ஹிருதய மந்திரத்துடன் ஸ்வாகா என்பதை கடைசியில் கொண்டதாக உச்சரிக்க வேண்டும். மூலவருக்கு தூபம் காட்டும்போது அவர் மூக்குக்கு நேராக காட்ட வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## 484 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக நாட்டுக்கு வருகைதர முடியாமல் வெளிநாடுகளில் சிக்கியிருந்த 484 இலங்கையர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பினர். ஐக்கிய அரபு எமிரேட்ஸிலின் டுபாயிலிருந்து 370 பேரும் மாலைதீவிலிருந்து 69 பேரும், கட்டாரின் டோஹாவிலிருந்து 45 பேரும் அவுஸ்திரேலியாவின் சிட்னியிலிருந்து நான்கு பேரும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்றுக் காலை வந்தடைந்தனர்.

இவ்வாறு வருகை தந்த அனைவரும் தனியார் வைத்திய சாலை ஊழியர்களினால் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக சுற்றுலா ஹோட்டல்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

## புதிய நீர்வழங்கல் திட்டங்கள் ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டிற்குள் நீர் வழங்கல் திட்டங்களை மிகவும் திறம்பட கொண்டு செல்வதற்கு அடுத்த வருடத்தில் புதிதாக 264 நீர் வழங்கல் திட்டங்களை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் நூற்றுக்கு 40 சதவீதமான அளவே நீர் வழங்கல் திட்டங்கள் காணப்படுவதாகவும் இதனை 78 சதவீதமாக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நடமாடும் மருத்துவம் அடுத்த மாதம் வரை நீடிப்பு

(கொழும்பு)

நாட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் நடத்தப்படும் இலவச மருத்துவ சேவைகள் அடுத்த மாதம் நடுப்பகுதி வரை நீடிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாநகர எல்லைக்குள் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் வசிப்பவர்களுக்காகவும் அடுக்கு மாடி குடியிருப்புக்களில் தனிமைப்படுத்தப்பட்ட மக்களுக்காகவும் இந்த சேவை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை இந்த சேவைகளின் மூலம் சுமார் நான்காயிரம் பேர் வரை சிகிச்சை பெற்றுள்ளதாக கொழும்பு மாநகர சபை அறிவித்துள்ளது. (ஐ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 230 | 300 | 250 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 150 | 180 |
| பச்சைமிளகாய் | 150 | 180 | 200 | 200 |
| தக்காளி | 120 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 80 | 50 |
| கோவா | 50 | 70 | 80 | 100 |
| கரட் | 130 | 200 | 200 | 240 |
| பூசணி | 80 | 70 | 60 | 80 |
| புடோல் | 80 | 90 | 80 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 240-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 160 | 180 |
| பாகற்காய் | 300 | 300 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 100 | 120 |
| பயற்றங்காய் | 300 | 400 | 350 | 300 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 100 | 80 | 120 | 120 |
| கறிமிளகாய் | 300 | 400 | 320 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 | 280 |
| போஞ்சி | 280 | 200 | 240 | 320 |
| கத்தரிதம்புள்ள | 250 | 180 | 300 | 240 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 60 | 60 |
| தேசிக்காய் | 200 | 200 | 180 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 85 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | --- | 400 | --- | --- |
| முள்ளங்கி | 80 | 70 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 80 | --- | 120 |




## ஜூடோ பயிற்சி



சிறுவன் ஒருவன் ஜூடோ பயில விரும்பினான். அவனுக்கோ ஒரு விபத்தினால் இடது கை போய் விட்டது.

எனினும் இந்தக் குறையைப் பொருட்படுத்தாமல், குரு ஒருவர் அவனுக்குப் பயிற்சி அளிக்க ஒப்புக் கொண்டார்.

தினமும் பயிற்சி அளித்தார் குரு. ஆனால் ஒரே ஒரு குத்து வித்தை தான் சொல்லிக் கொடுத்தார். நான்கைந்து மாதங்கள் சென்றன. அப்போதும் அதே பயிற்சிதான். சிறுவனுக்கோ ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் தொடர்ந்து பயிற்சி மேற்கொண்டான்.

ஒருநாள் சிறுவன் குருவைக் கேட்டே விட்டான். "இந்த ஒரு குத்து போதும் உனக்கு" என்று சொல்லி விட்டார். நாட்கள் கடந்தன.

குரு சிறுவனைப் போட்டிக்கு அனுப்பினார். ஒரு கையுடன் வந்த சிறுவனைப் பார்த்து பலரும் அற்பமாய் எண்ணினர்.

ஆனால் நீங்கள் நினைத்தது சரிதான். வெற்றி சிறுவனுக்கே. தன்னை விட பலசாலிகளை எல்லாம் ஆக்ரோஷமாய் எதிர்கொண்டு வீழ்த்தி விட்டான்.

எல்லோருக்கும் ஆச்சரியம். சிறுவனுக்கும். "எப்படி குருவே என்னால் ஒரு கையை வைத்துக்கொண்டு, ஒரே ஒரு குத்துப் பயிற்சியை மட்டும் கற்று வெற்றி பெற முடிந்தது?" என்று கேட்டான்.

குரு சொன்னார்: "இரண்டே காரணங்கள் தான். ஒன்று, நீ பயிற்சி செய்தது ஜூடோவிலேயே மிகவும் கடினமான குத்து. இரண்டு, இந்தக் குத்தை தடுக்க வேண்டும் என்றால் குத்துபவன் உன் இடது கையை மடக்க வேண்டும். உன்னிடம் அது இல்லை"

குருவுக்கு ஆத்மார்த்தமாக நன்றி சொன்னான் சிறுவன்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## மாண்புமிகு மாசிடோனியா

40



பெலொப்பனேசியா (Peloponnesus)

இரு நாடுகளுக்கு இடையே பகைமை இருக்கிறது அல்லது யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

ஒலிம்பிக் என்று வந்து விட்டால் போதும் எல்லா மோதல்களையும் ஒதுக்கி விடுவார்கள்.

எல்லாச் சண்டைகளையும் விட்டுவிடுவார்கள். தேவைப்பட்டால் ஒலிம்பிக் போட்டிகள் நடந்து முடிந்த பிறகு யுத்தம் தொடரும்.

ஒலிம்பிக் போட்டிகள் தொடங்குவதற்கு முன்னர் விளையாட வந்திருப்பவர்கள் அத்தனை பேரும் கிரேக்கர்கள்தானா என்பது பரிசோதனை செய்யப்படும்.

தங்களை நிரூபிப்பதற்குத் தேவையான ஆதாரங்களைக் கொண்டு வந்து காட்டுவார்கள். குல, கோத்திர விபரங்களை குழப்பமில்லாமல் சொல்லி நிரூபிப்பார்கள்.

அடுத்ததாக நான் ஒரு பரிசுத்தமான கிரேக்கன். ஒலிம்பிக் விளையாட்டு விதிகளை மீறமாட்டேன் என்று உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஓட்டப்பந்தயம், தாண்டுதல் போட்டிகள், மல்யுத்தம், குத்துச்சண்டை, ஈட்டி எறிதல் ஆகியன ஒலிம்பிக் போட்டியின் முக்கியமான விளையாட்டுக்கள். ஒன்றன் பின் ஒன்றாகப் போட்டிகள் நடக்கும்.

இறுதியாக தேர்ப்பந்தயம். அத்தனை போட்டிகளுமே கடுமையான வெயில் அடிக்கும் போது தான் நடக்கும். ஆனால் யாரும் பொருட்படுத்துவதில்லை.

எல்லாப் போட்டிகளும் முடிந்ததும் இறுதி நாள் அன்று பரிசளிப்பு விழா வெகு விமரிசையாக நடைபெறும். ஒலிவ் (Olive) மரத்து இலைகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட அழகான மாலைதான் ஒலிம்பிக் பரிசு.

வெற்றி பெற்றவரை அறிவிப்பாளர் ஒருவர் வந்து அவருடைய குடும்பம், நாடு உள்ளிட்ட அத்தனை விபரங்களையும் உரக்கச் சொல்வார். இதுதான் அவர்களுடைய பெருமைக்குரிய விடயம்.

கிரேக்கர்களுடைய வாழ்க்கையில் கவிதைகளுக்கு முக்கியமான இடம் உண்டு.

பேசும்போது ஏதாவது ஒரு விடயத்தை மேற்கோள் காட்ட வேண்டும் என்றால் சட்டென்று கவிதைகளைத் தான் சொல்வார்கள்.

இலியட், ஒடிஸி இரண்டுக்குமே அதிக மரியாதை கிரேக்கர்களால் தரப்பட்டது.

(தொடரும்)

மற்றவர்களுக்குத் தீமை விளைவிக்கும் போது நினைவில் கொள், உனக்கான நாளைய துன்பத்தை இன்றே நீ விதைத்துக் கொண்டிருக்கிறாய். – புத்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தீங்கு செய்வாருக்கு சொன்னாலும் கேட்பரோ

கார்த்திகைத் தீபத் திருநாள் சைவ மக்களின் வழிபாட்டுக்குரிய புனித நாள்.

திருவெண்ணாமலையில் அருட்பெரும் சோதியாய் சிவப்பரம்பொருள் காட்சி கொடுத்த நாளே கார்த்திகை விளக்கீடாகும்.

தனிப்பெரும் கருணை வள்ளலாகிய பரம்பொருள் அருட்பெரும் ஜோதியாக எழுந்து உலகம் முழுவதற்கும் ஒருவனாய், ஓசையாய், ஒளியாய், தேசவிளக்காய் நின்றுணர்த்தி சிவப்பரம் பொருளை தீபம் ஏற்றி வழிபடுகின்ற கிடைத்தற்கரிய நாளே கார்த்திகை விளக்கீடாகும்.

எனினும் சிவப்பரம்பொருளின் ஜோதியை விளக்கேற்றி வழிபடுவதற்குத் தடை செய்தால், அந்தத் தடையை செய்தவர்கள் மாபாவத்துக்கு ஆளாகி இந்த பூமியின்கண் நரக வாழ்வு வாழ்வர் என்பதை சாஸ்திர நூல்கள் உபதேசிக்கின்றன.

தவிர, கார்த்திகை மாதத்தில் இரண்டு பூரணை வரும் பட்சத்தில் உகந்ததும் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் திருவெண்ணாமலையில் தீபம் ஏற்றப்படுகின்ற நாளிலுமே விளக்கீடு செய்யப்பட வேண்டும்.

அந்தப் பூரணை நாளை விடுத்து பொருத்த மற்ற பூரணையில் தீபம் ஏற்றினால் அஃது நாட்டு மன்னர்க்கு மாரகத்தைத் தரும் என சோதிட சாஸ்திர நூல்கள் வகுத்துள்ளன.

இதை நாம் கூறுவதற்குக் காரணம் அந்தளவுக்கு கார்த்திகை விளக்கீடு மிகவும் பயபக்தியாக வழிபாடு செய்யப்பட வேண்டிய நாள்.

இவ்வாறாக, சிவப்பரம்பொருளின் ஜோதி வடிவத்தை தீபம் ஏற்றி வழிபாடு செய்வதற்கு யார் தடை செய்தாலும் அது அவர்களுக்கும் ஆட்சிப் பீடங்களுக்கும் அவலத்தைத் தரும் என்பது அனுபவங்களினூடான உண்மை.

நிலைமை இதுவாக இருக்கையில், சிவ ஆலயங்களில் சொக்கப்பனை எரிப்பதற்கும் கல்விச்சாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பொது இடங்களில் தீபம் ஏற்றுவதற்கும் பொலிஸாரும் படையினரும் தடை செய்த தான செய்திகள் பரவலாகியுள்ளன.

இச்செயலை நினைத்தபோது இதயம் பதறிக் கொண்டது.

சொக்கநாதப் பெருமானை – சொக்கப்பனை தீபம் ஏற்றி வழிபடுவதற்கு விதிக்கப்பட்ட தடையால் இந்த நாட்டுக்கு தீங்கு வரப் போகிறதே என்ற ஏக்கமே நம் நெஞ்சத்துப் பதறலுக்குக் காரணமாம்.

என்ன செய்வது; எது நடப்பதாக இறை நியதி உள்ளதோ! அதைத் தடுக்க வல்லார் யார் உளர்.

நடப்பதைப் பார்ப்போம். அவ்வளவுதான்.

## அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதி 2024ஆம் ஆண்டிற்குள் நிறுத்தப்படும் - மகிந்தானந்த

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டம் ஊடாக கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படும். அடுத்த ஆண்டு முதல் பெரும்பாலான இறக்குமதி உணவு பொருட்கள் உள்ளூர் மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் என கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்குள் அத்தியாவசிய உணவு பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவது நிறுத்தப்படும். பெரிய வெங்காயம், பச்சை மிளகாய் மற்றும் உருளைகிழங்கு ஆகிய தானியங்களை உள்ளூர் மட்டத்தில் உற்பத்தி செய்ய ஆரம்பக்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு நகரத்தில் உள்ள அடிப்படை வசதிகள் கிராமபுறங்களில் செயற்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஞா)

## மன்னார் பேசாலையிலிருந்து இந்தியாவிற்கு தப்பிக்க முயன்ற எழுவர் கைது

(மன்னார்)

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு சட்ட விரோதமான முறையில் கடல் வழியாக படகு மூலம் தப்பித்துச் செல்ல முற்பட்ட சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்ட 7 பேர் கடற்படையினரினால் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை பேசாலை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

சட்டவிரோதமாக படகில் இந்தியாவிற்கு செல்ல முயற்சித்த 5 பேரும், அவர்களை அழைத்துச் சென்ற ஆட்கடத்தல்காரர்கள் இருவரும் மன்னார் பேசாலை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் மன்னாரைச் சேர்ந்தவர்கள் எனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, 29 வயது இளைஞர் ஒருவரும், 29 வயது யுவதி ஒருவரும், 38 வயதான பெண்ணொருவரும், 08 மற்றும் 09 வயதுடைய இரண்டு பெண் பிள்ளைகளுமே இவ்வாறு கடற்படையினரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் 32 மற்றும் 37 வயதான பேசாலை பகுதியை சேர்ந்த இரண்டு ஆண்களே ஆட்கடத்தலில் ஈடுபட்டுள்ளதாக கடற்படையினர் குறிப்பிட்டனர். கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் பேசாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து பேசாலை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் குறித்த 7 பேரும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா-285)

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

அடர்ந்த காட்டின் நடுவில் ஏற்படக்கூடிய அபாயம் சன நெருக்கமுள்ள நகரத்தின் தெருவைக் கடக்கும் ஒரு பாதசாரிக்கு ஏற்படக்கூடிய அபாயத்தை விடக் குறைவானதாகவே இருக்கும் என்று அடித்துச் சொல்லலாம்.
-ஹென்னத் அன்டர்சன் (வேட்டைக்காரராக இருந்து இயற்கையியலாளராக மாறியவர்)

16
2020
பால்நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்பாடு
16 Days of Activism Against Gender Based Violence- 2020
JSAC

பெண்ணுக்கு வன்முறை செய்தாய் நம் கண்களே
இருண்டு போகும் மாதரை மதிக்கும்
மதியினைப் பெற்றே மாண்புடன் வாழ்ந்திடுவோம்

யாழ். சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center

ஊடக அனுசரணை: வலம்புரி

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## விடுதலைக்கான வழி



சூரிய ஒளியினால் சூடு பெற்றுக் கடலிலிருந்து ஆவியாக மாறி மேகமாகி அது குளிர்ந்து எந்த இடத்தில் மழையாகப் பெய்தாலும் அந்த நீர், தனக்குப் பிறப்பிடமாகிய கடலை நாடியே ஓடுவது போல, இறை நிலையிலிருந்து புறப்பட்டுப் பல தலைமுறைகளாக ஜீவன்களில் இயங்கி, மனிதனிடம் இறுதியாக வந்து இயங்கிக் கொண்டிருக்கும் சிற்றறிவு, முற்றறிவான இறைவனை நாடியே அலைகின்றது. அத்த கைய வளர்ச்சி நிலையில் உடல் தேவைக்கான பொருள், புலன் இன்பம் இவற்றில் ஈடுபடுகிறது. இங்கு தான் அறிவானது தான் போக வேண்டிய இடத்தை மறந்து, அடுத்தடுத்து தொடர்பு கொண்ட பொருட்கள், மக்கள், புலன் இன்பம் இவற்றோடு தொடர்பும், மேலும் பொருள்களும் இன்பமும் எளிதாக மேலும் மேலும் உழைக்காமலே கிடைக்கக்கூடிய வழிகளாகிய அதிகாரம், புகழ் இவற்றின் மீது நிறைவு பெறாத அவாவையும் பெருக்கிக் கொள்ளுகிறது.

எவ்வளவு தான் பொருளோ, புலன் இன்பமோ, புகழோ, அதிகாரமோ அமைந்தாலும் இன்னும் வேண்டும், இன்னும் உயர்வாக வேண்டும் என்ற உணர்ச்சி வயமான மன அலையில் இயங்குகிறது. இதனால் அளவு மீறியும், முறை மாறியும், ஞானேந்திரியங்களையும், கர்மேந்திரியங்களையும் பயன்படுத்த அவைகள் பழுதுபட்டு உடல் துன்பம், மன அமைதியின்மை, செயல் திறமிழத்தல், இதனால் சமுதாயத்தில் மதிப்பிழத்தல் ஆகிய குறைபாடுகளோடு வருந்திக் கொண்டே இருக்க வேண்டியதாகிறது. மெய்யுணர்வு பெற்ற குருவழியால் அறம் பயின்று இறைநிலை விளக்கமும் பெறும்போதுதான் தடம் மாறிய மன ஓட்டம் நேர்மையான இயக்கத்திற்கு வரும். துன்பத் தொடரிலிருந்து விடுதலை கிடைக்கும் வேறு எந்த வழியும் மனிதன் உணர்வதற்கு இல்லை.

# வரவு-செலவுத்திட்ட உரை- 2021




## நிறைவேற்றுத் தரமல்லாத அரச ஊழியர்கள் அலுவலக நேரத்தின் பின்னர் வேறு தொழில்களில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறைக்காக, சுற்றுலா ஊக்குவிப்பு அதிகார சபை போன்ற 5 நிறுவனங்கள் காணப்படும் அதேவேளை, தெங்குக் கைத்தொழில் துறைக்காக தெங்குப் பயிர்ச்செய்கை மற்றும் இணைந்த கைத்தொழில்கள் அபிவிருத்தி அதிகார சபை போன்ற 4 நிறுவனங்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றினை இணைந்த நிறுவனக் கட்டமைப்பொன்றாக உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

உற்பத்தித்திறனை அதிகரிக்கின்ற வகையிலான ஆராய்ச்சிகளுக்காக செலவிடப்படும் வளங்களை முகாமை செய்வதற்கு தேசிய ஆராய்ச்சி பேரவையுடன் இணைந்த வகையில் ஆராய்ச்சி நிறுவகங்களை இயக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

### அரச ஊழியர்களுக்கான சலுகைகள்

மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக சூரிய மின் சக்தியினைப் பெற்றுக்கொள்வதற்கு அரச ஊழியர்களுக்கான விசேட கடன் திட்டமொன்றினைச் செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அரச ஊழியர்களுக்கு நியமனங்கள் மற்றும் இடமாற்றல்கள் வழங்கும் போது வதிவிடத்தைக் கொண்ட மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

நிறைவேற்றுத் தரமல்லாத அரச ஊழியர்கள் அலுவலக நேரத்தின் பின்னர் ஏனைய தொழில்களில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்படுவதுடன் வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை நாடுபவர்களுக்கு இரண்டு வருட கொடுப்பனவுடன் கூடிய விடுமுறை வழங்கப்படும்.

வங்கிகளினால் வழங்கப்பட்ட அரச ஊழியர்களின் வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன்களுக்காக அறவிடப்படும் வட்டியினை ஆகக் கூடியது 7 சதவீதம் வரை குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இதன் மூலம் அரச ஊழியர்கள் மாதமொன்றுக்கு ரூபா 3,000 முதல் ரூபா 4,700 வரை சேமிக்க முடியும்.

சிறிய மற்றும் நடுத்தரளவிலான ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் (ரீ.ஐ.ஈ.பி.திட்டம்)

நேரடி மற்றும் நேரடியற்ற ஏற்றுமதிப் பொருட்களை ஊக்குவிப்பதற்கு இலங்கையில் காணப்படாத மூலப் பொருட்கள், உதிரிப் பாகங்கள், செயன்முறைப்படுத்தல் மற்றும் பொதியிடற் பொருட்கள், லேபல்கள் மற்றும் ஸ்ரிக்கர்கள், பட்டியல்கள் மற்றும் கையேடுகள் என்பவற்றுக்கு தற்காலிக இறக்குமதி வசதிகளை வழங்குவதன் மூலம் உள்நாட்டு உள்ளீடுகளுக்கு அதிகூடிய பெறுமதி சேர்ப்பினூடாக உயர்தர பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு ரீ.ஐ.ஈ.பி. திட்டம் செயற்படுத்தப்படும்.

இத்திட்டமானது சிறிய மற்றும் நடுத்தரளவிலான ஏற்றுமதியாளர்களுக்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் இலங்கைச் சுங்கம் என்பவற்றினால் தாபிக்கப்பட்ட விசேட ஏற்றுமதி வசதியளிப்பு நிலையத்தினால் செயற்படுத்தப்படுவதுடன் இறக்குமதி/ஏற்றுமதி பிரகடனங்கள் உள்ளடங்கலான அனைத்து ஆவணங்களையும் பரிசீலனை செய்வது தொடர்புடைய நிறுவனங்களினால் இப் பிரிவில் மேற்கொள்ளப்படும். இந்நிலையம் 3 மாதங்களுக்குள் தாபிக்கப்படும்.

### “சுரக்கிமு கங்கா” தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம்

“சுரக்கிமு கங்கா” என்பது நாட்டிலுள்ள 103 இயற்கை நதிப் படுகைகளில் காணப்படும் நீர்வளத்தைப் பாதுகாக்கக் கூடிய நீர்ப்பாசனம், குடிநீர், மின் உற்பத்தி, கைத்தொழில்கள், சுற்றுலா மற்றும் ஏனைய தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் தேசிய சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமாகும். மக்கள் தொகையின் 30 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் நதி நீரேந்து பகுதிகளுக்கு அருகிலேயே வாழ்கின்றனர்.

நாட்டின் நதிப் படுக்கைகளில் நீர் மாசுபடுவது, முக்கியமாக ஒழுங்கற்ற மனித நடவடிக்கைகள், நகரமயமாக்கல் மற்றும் கைத்தொழில் மய மாக்கல் ஆகியவற்றால் ஏற்படுகிறது.

பொலித்தீன், பிளாஸ்டிக் மற்றும் மலம் போன்றவற்றை ஆறுகளில் ஒழுங்கற்ற முறையில் அகற்றுதல் மற்றும் மண்ணரிப்பு மற்றும் பூச்சிக் கொல்லிகளின் பயன்பாடு காரணமாக ஆறுகள் மாசுபடுதல் என்பன சுற்றுச்சூழலுக்கு சவாலாக மாறியுள்ளது.

எனவே, பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்புத் தேவைகளுக்கு இணங்க ஒரு நிறுவப்பட்ட பொறிமுறைக்கு அமைவாக, கழிவுநீரை ஒழுங்கற்ற முறையில் அகற்றுவதைத் தடுத்தல் மற்றும் மணல் சுரங்கத்தை ஒழுங்குபடுத்துதல் போன்ற அடையாளம் காணப்பட்ட முன்னுரிமை நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக ரூபா 200 மில்லியனை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகிறேன்.

### வனப் பாதுகாப்பு

வனப் பரப்பினை 15,000 ஏக்கராக விரிவுபடுத்தும் துரிதப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின்படி பாதையின் இருமருங்கிலும், பாடசாலைகள், அரசாங்க மற்றும் தனியார் அலுவலகங்கள் அத்துடன் நகர சூழலில் கிடைக்கக்கூடிய நிலங்களில் பல்வேறு அளவுகளில் வனப் பரப்பினை அதிகரிப்பதற்கு முன்மொழியப்படுகின்றது.

சட்டவிரோதமான காடழிப்பினை தடுப்பதற்கு இலங்கை விமானப் படையின் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். அடையாளப்படுத்தப்பட்ட காடழிப்புகள் இடம்பெற்ற நிலங்களில் இலங்கை விமானப் படையினால் மீள் காடாக்கத்திற்கான உதவி வழங்கப்படும். இந் நோக்கத்திற்காக ரூபா 350 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.

### சுய வேலைவாய்ப்புக்கான பங்களிப்பு ஓய்வூதிய திட்டம்

அரச துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டமொன்று இருக்கின்ற போதிலும், அரச நிறுவனங்கள் மற்றும் தனியார்துறையின் சில ஊழியர்கள், ஊழியர் சேமலாப நிதியிலிருந்து மட்டுமே பயனடைகின்றனர்.

மேலும், விவசாயம், மீன்பிடி, சிறு நிறுவனங்கள் மற்றும் சுயதொழில் போன்ற உற்பத்தித் துறைகள் மற்றும் சேவைகளில் பணியாற்றும் பெரும்பான்மையினருக்கும் மற்றும் வேலைவாய்ப்பு, ஆடை, சுற்றுலா, பெருந் தோட்டம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலம் நாட்டிற்கு அந்நிய செலாவணி வருவாயைக் கொண்டு வருபவர்களுக்கும் ஓய்வூதியத் திட்டமோ அல்லது ஊழியர் சேமலாப நிதி பொறிமுறையோ கிடையாது.

இந்த ஊழியர்களுக்கு வயதான காலத்தில் நிரந்தர வருமானம் இல்லை. அதனால் தான் அவர்களுக்காக ஒரு பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை 2012 இல் முன் மொழிந்தேன். எனவே, 65 வயதின் இறுதி வரை வேலை வாய்ப்பில் உள்ளவர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகிறேன்.

### கட்டாய ஓய்வுபெறும் வயது

ஆண்களுக்கும் பெண்களுக்கும் கட்டாய ஓய்வு பெறுவதற்கு இரண்டு வெவ்வேறு வயது இருப்பதை நியாயப்படுத்த முடியாது. அரச துறைக்கு கட்டாய ஓய்வூதிய வயது 60 ஆண்டுகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் அதிக ஆயுட்காலம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பாலினம் அல்லது வேலைவாய்ப்புத் துறையைப் பொருட்படுத்தாமல் ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வூதிய வயதை நீடிப்பதற்கு நான் முன் மொழிகிறேன்.

பெண்களின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் 76.6 ஆண்டுகள் மற்றும் ஆண்களின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் 72 ஆண்டுகள் ஆகும். எவ்வாறாயினும், 1958 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஊழியர் சேமலாப நிதியச் சட்டம், நிதியத்தின் நன்மைகளுக்கு தகுதியான ஊழியர்களுக்கான ஓய்வூதிய வயதை பெண்களுக்கு 50 ஆண்டுகள் மற்றும் ஆண்களுக்கு 55 ஆண்டுகள் என நிர்ணயித்துள்ளது.

ஏனென்றால், ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நேரத்தில், பெண்களின் ஆயுட்காலம் 57.5 ஆண்டுகளாகவும், ஆண்களின் ஆயுட்காலம் 58.8 ஆண்டுகளாகவும் இருந்தது.

### கிராம உதவி

“சுபீட்சத்தின்நோக்கு” கொள்கை ஆவணத்தைத் தயாரிக்கும் வேளையில் நாட்டின் மக்களுடன் ஜனாதிபதி மேற்கொண்ட கலந்துரையாடலின்போதும் புதிய அரசாங்கத்தை தாபித்ததன் பின்னரும் அரசாங்கத்திடமிருந்து மக்கள் இலவச மற்றும் மானிய அடிப்படையில் எதையும் கோரவில்லை என்பதை நாம் அவதானித்தோம்.

தங்கள் பிள்ளைகளின் கல்விக்காக கிராமப்புற பாடசாலைகளையும், அவர்களின் அடிப்படை சுகாதாரத் தேவைகளுக்காக கிராமப்புற மருத்துவமனையையும் அபிவிருத்திசெய்யுமாறு அவர்கள் ஒரே குரலில் கோரிக்கை விடுத்தனர்.

எந்த வொரு இடையூறும் இன்றி அவர்களுக்கு அன்றாட வேலைகளை தொடர்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட தரங்களுக்கு இணங்க கிராமப்புற வீதியொன்றை வழங்குமாறும் கேட்டுக்கொண்டனர். பாதுகாப்பான குடிநீரை வழங்குமாறும் அவர்கள் மேலும் கேட்டுக் கொண்டனர்.

தங்கள் சொந்த திறமைகளைப் பயன்படுத்தி அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் குளங்களையும் கால்வாய்களையும் புனர்நிர்மாணம் செய்யுமாறும் அவர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

வனவிலங்குகளின் தாக்குதல்களிலிருந்து அவர்களின் சொத்துக்களையும் பிள்ளைகளையும் பாதுகாக்குமாறும், மேற்குறிப்பிட்ட வசதிகளுடன் கிராமத்திற்கு மின்சாரம், தொலைத்தொடர்பு மற்றும் தொழில்நுட்பத்தை வழங்குமாறும் கோரியுள்ளனர்.

எந்தவொரு இடைத்தரகரும் இல்லாமல் தங்கள் உற்பத்தியை சந்தைக்கு வழங்குவதற்கும் அவர்களின் பொருளாதார மற்றும் சமூக நடவடிக்கைகளுக்கு எந்தவிதமான சிரமங்களும் இன்றி நிதியைப் பெற்றுக்கொள்வதற்கும் ஒரு முறைமையை அவர்கள் கோரினர்.

கிராம மக்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் முன்னெடுப்புகளின் அடிப்படையில் கிராமத்திற்கு உதவுவதற்கு பின் வருவனவற்றை நான் முன்மொழி கிறேன். (தொடரும்)

## துப்பாக்கிச் சூட்...

காரணமாக மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கைதி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் காயமடைந்துள்ளனர்.

மஹர சிறைச்சாலைக்குள் ஏற்பட்ட பதற்ற நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அங்கு நிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி கைதி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் காயமடைந்துள்ளதாகவும் சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஞா)

## குடாநாட்டை...

தேவையில்லை எனவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டை முடக்குவது தொடர்பில் தீர்மானம் என சில பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளதாகவும், அது பிழையான செய்தி என தெரிவித்த வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், அவ்வாறு எந்த ஒரு தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக காரைநகர்ப் பகுதியில் கொழும்பிலிருந்து வருகை தந்த ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ள நிலையில் காரைநகர்ப் பகுதியில் அவரிடம் நேரடியாக தொடர்புகளைப் பேணிய 21 குடும்பங்களைச் சேர்ந்த 63 பேர் சுய தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள் எனவும், அவர்களுக்கு இன்றைய தினம் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் ஆ.கேதீஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பி.சி.ஆர் பரிசோதனை முடிவில் பலருக்கு தொற்று இனங் காணப்பட்டால் மாத்திரமே சில வேளைகளில் காரை நகர் பிரதேசம் முடக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றதாகவும், எனினும் அது தொடர்பில் தற்போதுவரை எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா-33)

## இரத்ததான...

யப்பட்டிருந்த இரத்ததான முகாம் சுன்னாகம் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் தலையீட்டினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்றைய இரத்ததான நிகழ்வில் இரத்தம் பெற்றுக் கொள்வதற்காகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினரும் ஏழாலை மேற்கு உதயசூரியன் சனசமூக நிலையத்திற்கு வருகை தந்த நிலையில் இரத்ததான முகாம் நிகழ்வு ஆரம்பமாக விருந்தது.

இந்நிலையில் மேற்படி சனசமூக நிலையத்திற்கு வருகை தந்த சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸாரும், பத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் இரத்ததான முகாம் நடத்துவதற்குத் தடை விதித்தனர். மீறி இரத்ததான முகாம் நிகழ்வை நடத்தினால் அனைவரையும் கைது செய்வோம் எனவும் சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி ஏற்பாட்டாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதனையடுத்து மிகுந்த சிரமத்தின் மத்தியில் காலதாமதமாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினர் குறித்த இரத்ததான முகாம் நடைபெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஞா-18)

## வடமராட்சியில்...

தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றது.

இவ்வாறு படுகாயமடைந்தவர் சிங்கைநகர் வல்லிபுரம் குறிச்சியைச் சேர்ந்த சின்னத்துரை துரைராசா (வயது-68) என்பவராவார்.

படுகாயமடைந்த முதியவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஞா-60)

## தீபம் ஏற்றச்...

கார்த்திகைத் தீபம் ஏற்ற சென்ற வயோதிபர் ஒருவர் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் மூத்தண்ணை என அழைக்கப்படும் 60 வயதான முதியவர் ஒருவரே கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

கிணற்றடியில் தீபம் ஏற்றுவதற்காக சென்றிருந்தவரை நீண்ட நேரமாக காணாத நிலையில் அவரைத் தேடிச் சென்றபோதே அவர் கிணற்றில் விழுந்து இறந்தமை தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஞா)

## கார்த்திகை தீபம்...

ரால் கைது செய்யப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் மசகையா தர்ஷிகன் என்பவரே இவ்வாறு நேற்றிரவு 7.45 மணியளவில் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக வளாகத்துக்குள் செல்லும் வாயில்கள் மூடப்பட்டதால் பரமேஸ்வரன் ஆலயத்தில் தீபம் ஏற்ற முடியாத நிலையில் மாணவர்கள் இவ்வாறு பண்பாட்டு வாயிலின் வெளியே தீபங்களை ஏற்ற முற்பட்டனர். அதனை அறிந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அந்த இடத்துக்கு வந்து தீபங்கள் ஏற்றுவதற்கு அனுமதியில்லை என்று தெரிவித்தனர்.

எனினும் மாணவர்கள் தங்கியிருக்கும் விடுதிகளில் தீபங்களை ஏற்றுமாறு பொலிஸார், மாணவர்களுக்கு அறிவுறுத்தினர்.

தமது அறிவுறுத்தலை மீறி தீபங்கள் ஏற்றினால் கைது செய்யப்படுவீர்கள் என்று பொலிஸார் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா-18,33,101)

## ஐவருக்கு...

களில் ஐந்து பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

கடந்த 21ஆம் திகதி வீதித் திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அவருடன் சாரதியாகக் கடமையாற்றியவர் தனிமைப்படுத்தலிலிருந்த நிலையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மடு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவரும் முசலி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மூவரும் தொற்றாளர்களாக உறுதி செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (ஞா-18)

## தீ விப...

மஹர சிறைச்சாலையில் நேற்று மாலை இடம்பெற்ற மோதல் சம்பவத்தையடுத்து தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் நால்வர் உயிரிழந்துள்ளதுடன் 24 பேர் படுகாயம் அடைந்த நிலையில் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தீயை கட்டுப்படுத்துவதற்காக 6 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தீயணைப்பு பிரிவு தெரிவித்துள்ளது. (ஞா)

## கொரோ...

நாட்டில் கோவிட் -19 நோயால் மேலும் 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்று நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் நாட்டில் கோவிட் -19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 116ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் நாட்டில் நேற்று +502 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனவரிமாதம் முதல்நேற்று வரை 23 ஆயிரத்து 484 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஞா)

## கார்த்திகை...

அதற்கு அனுமதிக்கப்பட்டது.

கார்த்திகைத் தீபத் திருநாளான நேற்றைய தினம் வீடுகள், ஆலயங்களில் தீபம் ஏற்ற தயாரான நிலையில் பல இடங்களில் படையினர், பொலிஸார் தடை விதித்தனர்.

எனினும் யாழ்.மாவட்ட அரசியல்வாதிகளின் தலையீட்டினால் ஆலயங்களில் கார்த்திகை தீபம் ஏற்ற பொலிஸார் அனுமதித்திருந்தனர். (ஞா-18)

## கே.கே.எஸ் கட...

வில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை தல்செவன இராணுவ நட்சத்திர விடுதிக்கு அருகாமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கடலில் குளித்துக் கொண்டிருந்த இரண்டு பேர் அலையில் அடித்துச் செல்லப்பட்டனர்.

தையிட்டியைச் சேர்ந்த சிவச்சந்திரன் நிரோஜன் (வயது-19), மாசிலாமணி தவச்செல்வம் (வயது -19) என்ற இருவருமே கடலையில் அடித்துச் செல்லப்பட்டனர்.

அவர்களில் சிவச்சந்திரன் நிரோஜன் என்பவர் நேற்று மாலை 5 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர். (ஞா)


மஹஜன சம்பத
திகதி 2020/11/29
சீட்டிழுப்பு இலக்கம் 4321
Q 1 9 4 3 9 1

மெகா பவர்
திகதி 29/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0688
G 7 16 21 44 61

தன நிதானய
திகதி -2020.11.29
சீட்டிழுப்பு இலக்கம் -358
C 16 25 52 77

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1633 திகதி 2020/11/29
W 19 20 26 70

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 29-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2616
P 20 38 66 70

அத கோடிபதி
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1117
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 29.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 87,105,980
51 57 68 76 I

சனிதா
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3447
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 29.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,949,518
03 04 12 28 C

சுப்பர் ஜக்பொட் 41,42,902/=
திகதி: 29.11.2020
வெற்றி வாரம்: 2998
வர்ணம்: ஊதா
வெற்றி இலக்கங்கள் 39 57 58 60 கடகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,638,320

J 23 35 45 58
சீட்டிழுப்பு வாரம் 657
மஞ்சள்
29.11 2020
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,755,760
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1291 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 29/11/2020 தினம் ஞாயிறு
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் A 39 67 69 75
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை 16,56,620

# காரைநகர் இந்துக் கல்லூரி 3 நாட்களுக்கு முடக்கம்

## வடக்கு கல்வியமைச்சு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் தொற்றாளருடன் தொடர்புபட்ட காரைநகர் இந்துக் கல்லூரி ஆசிரியர் ஒருவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காரைநகர் இந்துக்கல்லூரியை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் இந்துக் கல்லூரி 3 நாட்கள் மூடப்படுவதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், எல். இளங்கோவன் அறிவித்துள்ளார்.

"வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரனின் ஆலோசனைக்கு அமைய இன்று திங்கட்கிழமை தொடக்கம் வரும் புதன்கிழமை வரை 3 நாட்களுக்கு காரைநகர் இந்துக் கல்லூரி மூடப்படுகிறது.

காரைநகரில் கொரோனாத் தொற்றுள்ள ஒருவர் கண்டறியப்பட்ட நிலையில் அவருடன் நெருக்கமாகப் பழகிய ஆசிரியர் ஒருவர், காரைநகர் இந்துக் கல்லூரியில் கற்பிக்கின்றார். அவர் கடந்த வாரம் பாடசாலைக்குச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் அவரது பி.சி.ஆர் பரிசோதனை வரும் புதன்கிழமை முன்னெடுக்கப் படவுள்ளது. அன்று அவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று அறிக்கை கிடைத்தால் மறுநாள் வியாழக்கிழமை பாடசாலை ஆரம்பிக்கப்படும்" என்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (ஞா)

### கிளி. பரந்தன் பகுதியில்

# கார்த்திகை விளக்கீட்டுக்கு இராணுவம் இடையூறு

(முறிகண்டி)

கார்த்திகை விளக்கீட்டுக்கு இராணுவம் இடையூறு ஏற்படுத்தியுடன் மக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டம் பரந்தன் பகுதியில் கார்த்திகை விளக்கீட்டுக்காக தீபம் ஏற்றிய வயோதிபத் தம்பதியர் இருவர் இராணுவத்தினரால் மிரட்டப்பட்டு விளக்குகளும் தூக்கிவீசப் பட்டதாக சம்மந்தப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

வழமைபோல கார்த்திகை விளக்கீட்டிற்காக விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. வீட்டு முற்றத் தில் விளக்குகள் ஏற்றப்பட்டிருந்த நிலையில் வீட்டு வளவின் உள்ளே வந்த இராணுவத்தினர் விளக்குகளை தூக்கிவீசியுள்ளனர். அதன் பின்னர் வயோதிபரை துப்பாக்கியால் தாக்கவந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பரந்தன்இராணுவமுகாமைச் சேர்ந்தவர்கள் இராணுவ சீருடையில் இவ்வாறு அச்சுறுத்தியுடன் தாக்க முற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நேற்று முன்தினம் பரந்தன் பகுதியில் குறித்த இராணுவத்தினரே ஊடகவியலாளர்களை அச்சுறுத்தியுடன் ஒளிப்பதிவு செய்த காட்சிகளை அழித்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஞா-100.312)

### கொரோனா அறிகுறியுடன்

# அல்லைப்பிட்டி இளைஞன் யாழ். போதனாவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். அல்லைப்பிட்டிக்கு கொழும்பில் இருந்து வந்த 22 வயதான இளைஞன் கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் யாழ். போதனா வைத்தியசாலையின் சிறப்பு கொரோனாச் சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் பேருந்தில் இருந்து இறங்கியதும் வீட்டுக்கு அழைத்துச் சென்ற அவரது தாயார் தனிமைப் படுத்தப்பட்டுள்ளார்.

இந்தத் தகவலை வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

அவர் தனக்கு காய்ச்சல் உள்ளதாகவும் உடல் நிலை சரியில்லை என்றும் தாயாருக்கு அறிவித்துள்ளார். அதனால் தாயார் அவரை யாழ்ப்பாணம் நகர் பேருந்து நிலையத்துக்குச் சென்று அல்லைப்பிட்டியிலுள்ள வீட்டுக்கு அழைத்துச்சென்றுள்ளார்.

பின்னர் அந்த இளைஞன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று சுய தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

அவரது மாதிரிகள் பி.சி. ஆர் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், இளைஞனின் தாயார் வேலணை சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலின் கீழ் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (ஞா)



நல்லூரில் இடம்பெற்ற கார்த்திகை தீப நிகழ்வு


காணிகள் தேவை

யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் பிரதேச செயலக எல்லைகளுக்குள் 20 பரப்பு தொடக்கம் 50 பரப்பு வரையான காணி தேவை. (4774)

( தரகர் தேவையில்லை. )

076 221 2037

வேலை வாய்ப்பு

அலுவலக உதவியாளர் தேவை. தனியார் அலுவலகம் ஒன்றில் பணி புரிவதற்கு பெண் ஊழியர் தேவை. (C-801)

077 572 9724

சிறுநீரகம் தேவை

உரும்பிராய் தெற்கு, யோகபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட 25 வயதுடைய ஆண் ஒருவருக்கு 0+, A+ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. (C-799)

076 314 5365
077 212 8063

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK- 1025 /=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், மானிப்பாய், புதுக்குடியிருப்பு, சுன்னாகம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-735)

குத்தகைக்கு



Double Cub வகை வாகனம் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்படும். (4800)

075 052 3801
077 006 2343

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (4799)

மீண்டும்

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-785)

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 3536

புதிய வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், பருத்தித்துறையில் உள்ள தினமும் இயங்கி வரும் ரெஸ்ரோரன்ட் (உணவகம்) மற்றும் திருமண மண்டபம் இணைந்த நிறுவனம் ஒன்றுக்கு உணவு பரிமாறுபவர் இருவர் (Waiter) மற்றும் சமையல் உதவியாளர் ( Kitchen Helper ) தேவை.

சம்பளம் அனுபவம், தகுதி அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படும். (C-803)

Sun Digital PVT. Ltd. சூரிய மஹால்

பிரதான வீதி, பருத்தித்துறை.

077 704 6623, 076 704 6623, 077 315 1654

2021 - தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ZOOM வகுப்புக்கள்

ஆரம்பம் - 05.12.2020

ஆசிரியர் - திரு. வே. அன்பழகன்

மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் முற்கூட்டியே 077 306 8999 என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும். (4780)

10வருட வெற்றிகரமான சேவையில்....

கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது விசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்

LIFESKILLS A1 வகுப்புக்கள் மற்றும் GERMAN A1 வகுப்புக்கள் IELTS

இலவச பதிவுகளுக்கு : 0779265447 (please call at 10am - 5pm) (C-787)

WORLD EDUCATION CONSULTANCY

0779265447 / 0217200989


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.